[illegible]

மலர் 8 இதழ் 4

April 1935

RG73 ... 211, N28
M35.8.4.
187105

726

726

Registered No. M. 2330. "SIDDHANTHAM."
Vol. 8—No. 4.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | யுவ ஆண்டு சித்திரைத் திங்கள் 1935 [illegible] | இதழ் ௪ |
|---|---|---|

OFFICE OF [illegible]
9-MAY 1935
MADRAS

உள்ளுறை பக்கம்

அனுபோகக் கட்டளை ... [illegible]
அத்திக்குடித் தலைமைப் பெரு[illegible] ... [illegible]
இடையாறிடைமருதே ... [illegible]
(திருவள்ளுவர் திருநாள்) அறிக்கை ... [illegible]
சித்தாந்த சாத்திரம் ... ௨0௧ - ௨௨௪

ஆசிரியர்:—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர்:—அ. சிதம்பரநாத செட்டியார், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

# நால்வர் திருநாள்

ஒவ்வோராண்டிலும் தமிழ் நாட்டினர் நால்வர் திருநாள் என்று ஒரு நாளைக் கொண்டாடுவதும், அத்தகைய கொண்டாட்டத்தைத் தமிழாண்டு தொடங்கும் முதல் நாளன்றே மிகச் சிறப்பாக நடத்துவதும் நலம். எனவே, தமிழ் வருஷப்பிறப்பு தினத்தில் சைவசபைகளும் சைவநன்மக்களும் தங்கள் சபைகளிலும், இல்லங்களிலும் திருக்கோயில்களிலும் நால்வர் திருநாளைக் கொண்டாடுமாறு வேண்டுகிறோம். இவ்வாண்டில் ஷை வருஷப்பிறப்பு நாளாகிய யுவ௵ சித்திரை௴ ௧௳ (14·4·1935) ஞாயிற்றுக்கிழமை யன்று நமது சமாஜம் நால்வர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும். திருமயிலாப்பூர் திருக்கோயிலில் நால்வர் திருவுருவங்கட்கு வழிபாடு நடத்தி நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தின் இரண்டாம் பதிப்பைச் சமாஜத்தினர் இத்திருநாளின் நினைவுக்குறியாக வெளியிடுவார்கள். அப்பர்சுவாமிகள் தேவாரத்தின் இரண்டாம் பதிப்பும் சித்திரைச் சதயத்தன்று வெளிவருதல் கூடுமென்றெதிர்பார்க்கப்படுகின்றது. அதற்குரிய வேலை விரைவாக நடந்து வருகிறது. விலை முதலிய விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

---

## திருவாசக உரை

இவ்வுரை சமாஜ அங்கத்தினர்க்கு ஒவ்வொரு பிரதிமட்டும் இரண்டு ரூபா விலைக்குத் தரப்பட்டது. இனி ஒவ்வோர் அங்கத்தவர்க்கும் ஐந்து பிரதிகள் வரை இவ்விலை விகிதப்படி தரப்படும்.

---

## சிவப்பிரகாச வகுப்பு

இவ்வகுப்பு ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் ஒழுங்காகத் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் பத்து வகுப்புகள் நடந்துள்ளன.

---

## திருமயிலாப்பூர் திருவிழாவில் சமயபோதனை

வழக்கம்போல் இவ்விழாவில் 8-ம் நாள் முதல் மூன்று நாட்கள் சமாஜச்சார்பில் சமயபோதனை நிகழ்ந்தது. முதல்நாள் திருவாளர்கள் துரைக்கண் பிள்ளை, சண்முக முதலியார், எதிராஜ முதலியார், குப்புச்சாமி முதலியார் ஆகிய நால்வர் முறையே காரைக்காலம்மை, பூம்பாவை, வன்தொண்டர், பூம்பாவைப் பதிகம் என்பனபற்றிப் பேசினார்கள். இரண்டாம் நாள் திருவாளர்கள் சண்முக முதலியார், குப்புச்சாமி முதலியார் பிக்ஷாடனப் பிரபாவம்பற்றிப் பேசினார்கள். மூன்றாம் நாள் சண்முக முதலியார் திருக்கல்யாண நுட்பம்பற்றிப் பேசினார்.

Registered No. M. 2330

9-MAY 1935 MADRAS

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் அ | யுவ ஆண்டு சித்திரைத் திங்கள் 1935ஆம் ஏப்ரல்மீ | இதழ் ச |
|---|---|---|

## துகளறுபோதக் கட்டளை

' ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.'

' சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுநுந் திகழ்தாற் பொருட்டே.'

சத்திநி பாதம் பிறந்த ஆன்மாவைத் தேர்ந்த ஆசாரியன் இவனுடைய மனோ வாக்குக் காயங்கள் பழைய வாதனைகளிற் செலுத்தாமல் மோட்சத் துறையிலே புரிதலைத் திருவுளம் பற்றி இவனுக்குப் பதி பசு பாச தெரிசனம் பண்ணுவிக்கிறதே திருவுளமாக நினைந்தருளிப் பதி பசு பாசத்தின் உண்மைகளை அருளிச்செய்ய, இவன் அருளிச்செய்ததை நிராகரித்துத் தன் போதத்துக்கு எட்டினவற்றைத் தானென்று சாதித்துச் சுதந்திரம்பண்ணிப் பின்பு உடன்படத் துகளறுத்துப் பாலித்தருளப் பொருந்தின முறைமையைச் சொல்லுகையாலே துகளறுபோதக்கட்டளையெனப் பேராயிற்று.

இனி அருளிச் செய்தபடி : நித்தமாய் நிராலம்பமாய் நின்மலமாய் நிரஞ்சனமாய் நிராதாரமாய் நேயமாய் நிருவிகற்பமாய் அனந்தமாய் அருத்தமாய் அகளமாய் அறிவானந்தமாய் அனுமயமாய் அகண்டமாய் சுத்தமாய் சுகமாய் நிராமயமாய் சோதியாய் சுடராய் வாசாமகோசரமாய் ஏக தேசமாய் அல்லவுமாய்ப் பரிபூரணமு மல்லவுமாய் அறிவு மறியாமலு மல்லவுமாய் அகண்ட பரிபூரணமாய் எல்லாவற்றுக்கு மேலாயிருப்பதாய்ச் சர்வத்தையும் ஒரு காலத்திலே அறியத் தக்கவனுமாய் ரூபம் அரூபம் ரூபாரூபமென்று சொல்லப்பட்ட மூன்றுமாய் அல்லவுமாய் குணாதீதனாய் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்று சொல்லப்பட்ட மூன்றுமாய் அல்லவுமாய் அளவிறந்த ஆன்மாக்களுக்கும் பிராணனாய் ஒரு காலமுஞ் சலிப்பில்லாதவனாய் அசேதனங்களுக்குஞ் சேட்டையாய் அதிலகப்படாதவனாய்ப் பஞ்சகிருத்தியங்களையும் விகார மின்றியே நடத்துபவனாய் நிராகாரனாய் அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் இப்படிப் பெயர் பெற்று நிற்கிற பரமேசுவரனையும்,

விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்று மூன்று வகைப்பட்டு இருக்கச்சிதேயும் எண்ணுதற் கரிதாய் அழியாததாய் மல சகசமாய் ஒற்றித்தறிவதாய்க் கன்மங்களுக் கீடாக மாறிப் பிறப்பதாய் நிற்கின்ற தத்துவமுமாய் இப்படிப் பெயருடைத்தா யிருக்கிற ஆன்மாக்களையும்,

இந்த ஆன்மாக்களைச் செம்பிற் காளிதம் போலவும் சமுத்திரத்துச் சலமும் உப்பும் போலவும் பிறவிக்குருடன் கண்ணிற் றமசுபோலவும் அனாதியே பொருந்திப் போதுகிற ஆணவமலத்தையும்,

இந்த ஆணவமலத்தைப் பொருந்தின நீட்டத்தாலே தன்னை யறியாதபடியாலே தனக்குப் பிராணனாய் நிற்கிற அறிவை அறியாத குற்றத்தெண்டமான கன்மத்துக் கீடாக



உண்டான இதாகிதங்களிலே வந்தேறுகிற புண்ணிய பாவங்களையும்,

இந்தப் புண்ணிய பாவங்களை அனுபவித்துத் தொலைப்பிக்கை காரணமாகச் செறிந்து வருகிற மாயையா லுண்டான தனுகரண புவன போகங்களையும்,

அவையிற்றை நடத்துவதான சுத்த தத்துவங்களுமாக ஐம்பத்தோ ரட்சரங்களுமாக வாக்காதி சாத்திரங்களுமாக விரிந்த மகாமாயையையும்,

ஆணவமலம் பக்குவமாம்படிக்கு ஈடாக நின்று திரோபவிக்கிற திரோதாயியையும் உனக்கு நாம் அறிவிக்க அறிந்து, பஞ்ச மலத்தையும் பதினெட்டவத்தையையும் நீங்கி, உன் செயலற்றுக் கர்த்தாவின் செயலெனக் கண்டு அகண்ட பரிபூரணமான பரமானந்த சொரூபத்திலே நிறைந்தனுபவிப்பாயாக வென்று இவனுடைய சத்திநிபாதத் தளவுங் கண்டு இவன் பதிபசுபாசத்தி னுண்மையை அறியாதவனாகையாலே இதுவு முண்டென்னு முறைமையுந் தோன்றி மேல் இவன் வினவுகை காரணமாக வகுத்தருளிச் செய்த ஆசாரியனை நோக்கிச் சீடன் சொன்னபடி :

இப்படி நிற்பதொரு பரமேசுரன் உண்டென்றும் இப்படிச் சொல்லப்பட்ட ஆன்மா உண்டென்றும் ஆன்மாவுக்கு அனாதிமலமான ஆணவமலமுண்டென்றும் இந்த ஆணவமல காரணத்தினால் புண்ணிய பாவமுண்டென்றும் கண்டதுண்டோ?

ஆனால் உன்னால் காணப்பட்டதெது?

நான் கண்டது இந்த உடம்பே காணும், நீர் வேறறியுமென்கிறதில்லை.

கண்ட நீ நிற்க, நீ சொன்ன உடம்பு அறியுமாகில் நீ முன்பு உண்டு போந்த சோறு சுடுகிறதென்று தொடப் பயப்

187/05

பட்டுக் கையை வாங்கினதும் ஆறிற்றென் றறிந்து உண்டதும் உடம்பல்லவே.

அதேதன்! அப்பொழுதுந் தொட்டுப் பார்த்தல்லவோ சுடுகிற தென்றதும் குளிர்ந்த தென்றதும். ஆனபடியினாலே உடம்பே காணு மறிவது, நீர் வேறறியு மென்கிற தில்லை.

நீ சொன்ன உடம்பு அறியுமாகில் சவமானபோது முருடுந் தானும் தன்னிற் பேதமறக் கிடந்து வெந்ததே.—வெந்தது.

அப்பொழுது சுட்ட தெனக் கடக்கக் குதித்து நிற்கக் கண்டதில்லையே.—இல்லை.

ஆனபடியாலே நீ சொன்ன உடம்பு அறியாது, அறியுமது வேறே.

உடம்பறியுங் காணும். பூதங்கள் நாலுங் கூடின இடத்திலே ஓரறிவு எழுந்திருக்கும். அதென்போல வென்னில் பாக்கும் வெற்றிலையுஞ் சுண்ணாம்புங் கூடின விடத்திலே ஒரு சிவப்பு எழுந்தாற்போல.

ஆனால் அறியாமற் கிடப்பானேன்?—அவை யிற்றி லொன்று பிரிகையாலே.

பிரிந்தது எது?—வாயு.

அந்த வாயு உறக்கத்திற் கூடிப் பொருந்திக் கலந்து வாங்கல் வலித்தல் கிடத்த லென்னுங் குணங்களைச் செய்து கொண்டு நிற்கிறதோ இல்லையோ?—நிற்கிறது.

அப்பொழுது ஒன்றையும் அறியாமற் கிடந்ததே?—கிடந்தது.

ஆகையாலே பூதங்கள் கூடியும் அறியாது; அறியுமென்ற நீ இவையிற்றி லொன்றல்லை. இந்தப் பிறவி பூதகாரியமாகையாலே தேகாதி பிரபஞ்சத்தை மறந்திருப்பாயாக.

தேகாதி பிரபஞ்சத்தை அறியாதபடிக்கும் தான் இவையிற்றி லொன்றல்லாத படிக்கும் பொருந்தி இவையிற்றை



மறந்திருந்த சீடனை அநுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி:

அந்த அவசரத்திலே சத்தாதிகளே யுற்றதான படியாலே சத்தாதிகளை யறிந்த பொறிகளைந்துங் காணும் அறிவது, நீர் வேறறியு மென்கின்றதில்லை.

பொறிக ளென்கிறாய் எவற்றை?—இந்த மெய் வாய் கண் மூக்குச் செவியை.

நீ முன்பு அறியா தென்ற உடம்பிலே யல்லவோ?—ஆம்.

ஆனால் அப் பொறிகள் இல்லையே?—உண்டு காண்.

அதேது இந்த உறுப்பிலே நின்று சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை யறிகிறது?—ஆகையால் அந்தப் பொறிகளைந்துங் காணும் அறிகிறது.

உறக்கத்தில் அறியாமற் கிடப்பானேன்?—அவை ஒடுங்கினபடியாலே.

ஒடுங்கினபோது அறியா திருந்தும் உணர்ந்தபோது அறிகிறதுஞ் செய்கிறது பொறிகளே யாகில் இவைதான் ஒன்றறிந்தது ஒன்றறியா திருப்பானேன்?—ஒன்றறிந்தது ஒன்றறிந்து செய்வதென்.

அஞ்சும் அஞ்சாக அறியுமாகில் இவை அஞ்சும் ஒன்றை ஒன்றறியாமல் சீவித்தது எது காண்?

அவையிற்றுக்கு உட்காரணங்களாகிய மனம் புத்தி ஆங்காரம் சித்தங்காண்.

ஆனால் அந்தக்கரணங்கள் நாலுங் காணும் அறிவது, நீர் வேறறியு மென்கிறதில்லை.

அந்தக்கரணங்கள் அவ்விடத்தில் ஒன்றை ஒன்றறிந்த தில்லை. ஒன்றறிந்தது ஒன்றறிந்தது மில்லையே. ஒன்றை யொன்றறிந்தும் ஒன்றறிந்தது ஒன்றறிந்துஞ் செய்வதென் நாலும் நாலாக அறியுமாகில்? அதெங்ஙனே? மனம்

பற்றும் புந்தி நிச்சயிக்கும் ஆங்கார மெழுந்திருக்கும் சித்தம் சிந்திக்கும். அதெதென்போல வென்னில் கைத்தல் புளித்தல் கார்த்தல் உவர்த்தல் தித்தித்தல் கூர்த்த லென்னப்பட்ட ரசங்கள் கைத்தும் புளித்தும் கார்த்தும் தித்தித்தும் கூர்த்தும் செய்கிற முறைமையானாற் போலாங்காண். கைக்கிறதுக்குக் கைக்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்கக் கைக்கிறோமென்றறியாதே. புளிக்கிறதுக்குப் புளிக்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்கப் புளிக்கிறோமென்றறியாதே. கார்க்கிறதற்குக் கார்க்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்கக் கார்க்கிறோமென்றறியாதே. தித்திக்கிறதுக்குத் தித்திக்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்கத் தித்திக்கிறோமென்றறியாதே. இந்த முறைமை போல மனத்துக்குப் பற்றுகிற தன்மை தனக்கென உண்டாயிருக்கப் பற்றுகிறோமென்றறியாதே. புந்திக்கு நிச்சயிக்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்க நிச்சயிக்கிறோமென்றறியாதே. ஆங்காரத்துக்கு எழுந்திருக்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்க எழுந்திருக்கிறோமென் றறியாதே. சித்தத்துக்குச் சிந்திக்கிற தன்மை தனக்கென உண்டாயிருக்கச் சிந்திக்கிறோமென் றறியாதே. ஆகையால் முன்பு தானறியாதென்று சொல்லப்பட்ட இரதங்களை ஒருவன் இது கைக்குமென்றும், இது புளிக்குமென்றும், இது கார்க்குமென்றும், இது தித்திக்குமென்றும் அனுபவித் தறிந்தாற்போல, முன் சொன்ன அந்தக்கரணங்களாகிய உட்கரணங்களையும், மனம் பற்றுமென்றும், புத்தி நிச்சயிக்குமென்றும், ஆங்காரம் எழுந்திருக்குமென்றும், சித்தஞ் சிந்திக்குமென்றும் அறிந்ததொரு முதல் உண்டோ இல்லையோ? உண்டாகவேணும்.

அதேதென்கிறாயாகில் இந்தக் கருவி கரணங்களையும் தன்னையும் பரமேசுரன் கூட்டினபோது இவையிற்றைச்



சீவிக்கையும் பண்ணிச் சீவியாதிருக்கவும் பண்ணிப் புணர்ந்து வருகிற அந்தக்கரணங்கள் உட்கரணமாகக் கூடிவருகிற கருவிகள் புறக்கருவியுமாகக் கூடின காலத்துக்கு இவை தானாய் இவையிற்றுக்கு வேறுமாய் ஆணவமலத்தினாலே மறைப்புண்டு இதமகிதங்களைப் பொசித்தும் ஆர்ச்சித்தும் மாயையாலே மயங்கிப் பொய்யாயிருக்கிற தேகாதிப் பிரபஞ்சத்தை மெய்யென்று நின்று திரோதாயியாலே தனக்குப் பிராணனாய் நிற்கிற அருளையும் அறியாமல் மகாமாயையாலே பிரேரகனாய் யாதொரு விடயத்தை இந்திரியத்தாலே கண்டறிந்து கண்டாசைப்பட்டுபகரிக்குந் தொழிலைச் செய்து யானெனதென்று நிற்பதொன்றுண்டுகாண். ஆகையாலே நீ சொல்லுகிற அந்தக்கரணங்கள் அறியாது. நீயும் இவையிற்றில் ஒன்றல்லை, அறியுமது வேறே. ஆகையால் இவை அவிழ இருப்பாயாக.

அந்தக்கரணங்கள் அறியாதபடிக்கும் தான் இவையிற்றை அன்னியமாம்படிக்கும் பொருந்தி இவையிற்றை அவிழ்ந்திருந்த சீடனை அனுபவங்கேட்டவளவில் அவன் சொன்னபடி :

அவ்விடத்திலே சேடித்த பொருளாகக் கண்டது மூன்று செய்தி.

அவை எது ?

தேக முதலாக நானென்றபிமானம் பண்ணிப் போந்த கர்வமும், அவை நீயல்லவென்று நீர் இசைவிக்க அதற்குப் பொருந்தியிருந்த சாந்தமும், இவையிற்றை நீங்கினவிடத்து உண்டான மயக்கமும்.

என்று சொன்னது ராசதம் தாமதம் சாத்துவிதமென்னப்பட்ட குணத்திரயங்கள் காண்.

ஆனால் அந்தக் குணங்கள் காணும் அறிவது, நீர் வேறறியுமென்கிறதில்லை.

இவைதான் ஒரு குணத்தை ஒரு குணம் அறியாதபடியாலும், இவைதான் மூலப்பிரகிருதியென்று ஒரு தத்துவத்திலே தோற்றப்பட்டதாகையாலும், ஒருவனைக் குணவான் ஒருவனைக் குணவீனனென்கையாலும், இவை மூன்றும் ஒருவனுக்கே நடக்குமாகையால் இந்த முக்குணங்களினுங் கூடி நடக்கிறதொன்று உண்டு. ஆகையால் அதனை அறியவேணும். நீ சொல்லுகிற குணங்கள் அறியாதாகும். நீயும் இவையிற்றிலொன்றல்லை. இந்தக் குணங்களை நீங்கியிருப்பாயாக.

இந்தக் குணங்கள் அறியாதபடிக்கும் தான் இவையிற்றிலொன்றல்லாதபடிக்கும் பொருந்தி இவையிற்றை நீங்கியிருந்த சீடனை அனுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி :

அவ்விடத்தில் சுவாசம் வழங்குகையாலே பிராணவாயுக் காணும் அறிவது, நீர் வேறறியு மென்கிறதில்லை.

நீ சொன்ன பிராணவாயு உறக்கத்திற் கூடிப் பொருந்திக் கலந்து நின்று உயிர்க்கிறதோ இல்லையோ?—உயிர்க்கிறது.

அப்பொழுது பாம்பு தேகத்துடனே ஏறிப்போக ஒன்றும் அறியாமற் கிடந்ததே?—கிடந்தது.

ஆகையால் நீ சொன்ன பிராணவாயுவும் அறியாது. நீயும் இந்தப் பிராணவாயுவல்லை. ஆகையால் இந்தப் பிராணவாயுவில் அயிக்கியங் குலைந்திருப்பாயாக.

பிராணவாயுவும் அறியாதபடிக்குந் தானல்லாதபடிக்கும் பொருந்தியிருந்து பிராணவாயுவி லயிக்கியங் குலைந்த சீடனை அனுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி :

எனக்கும் ஒன்றுமறியத் தெரிந்ததில்லை யென்றுனைகையால் தத்துவந் தொண்ணூற்றாறுங் கழன்றது.

இந்த அவதாரம் ஐந்தாலுங் கருவிகள் தொண்ணூற்றாறுங் கழன்றதெப்படி ?



தேகத்தை நானென்றிருந்தாய். இவற்றை நீயல்லவென்றிசைவிக்க இதற்குப் பொருந்தி இதனை நீங்கியிருந்த அவதாரம் பஞ்ச பூதப் பழிப்பு. தேகம் நீங்கவே பஞ்ச பூதங்களைஞ்சும் பூத காரியம் இருபத்தஞ்சும் ஏடணைகள் மூன்றும் நாடிகள் பத்தும் ஆக நாற்பத்து மூன்று கருவிகளும் நீங்கிற்றெனக் கொள்க.

இரண்டாம் அவதாரத்தில் சத்தாதிகளே சீவித்ததாகையால் சத்தாதிகளை யறிந்த பொறிகளை நானென்றிருந்தாய். அதனை நீயல்ல வென்று இசைவிக்க இதற்குப் பொருந்தி இவையிற்றை நீங்கி யிருந்த அவதாரம் பொறியற வுணர்தல். ஞானேந்திரியங்கள் ஐந்தும் நீங்கவே இவை யிற்றின் விடயங்களான தன்மாத்திரைகளைந்தும் இவையிற்றின் வழித்தான கன்மேந்திரியங்களைந்தும் இவையிற்றின் றொழிலான வசனாதிகளைந்துமாக இருபதும் நீங்கிற்றெனக் கொள்க.

மூன்றும் அவதாரத்தில் அந்தக்கரணங்கள் சீவித்ததாகையால் அந்தக் கரணங்களை நானென்றிருந்தாய். அதனை நீ யல்ல வென்று இசைவிக்க இதற்குப் பொருந்தி இதனை நீங்கியிருந்த அவதாரம் அந்தக்கரணங்கள் சுத்தி. இந்த அந்தக் கரணங்கள் நீங்கவே இவையிற்றைப் பிரேரித்த அகாரம் உகாரம் மகாரம் விந்துவும் இவை யிடமாக நின்று சீவிக்கத்தக்க வாக்குக்கள் நாலும் இவை யெட்டும் நீங்கிற்றெனக் கொள்க.

நாலாம் அவதாரத்தில் குணத்திரயங்கள் சீவித்ததாகையால் இதனை நானென்றிருந்தாய். இதனை நீயல்லவென்றிசைவிக்க இதற்குப் பொருந்தி இவையிற்றை நீங்கவே இவையிற்றுக்கு உபாதானமான மூலப்பிரகிருதி நீங்கும். மூலப்பிரகிருதியும் முக்குணங்களும் நீங்கவே இவனுக்குக் கன்மசீவனமில்லை யாதலால் கன்மத்தைக் கூட்டுகிற காலமும் வரைந்து நிற்கிற நியதியும் பொசிப்பில்லாதாகையாலே இந்

சாஞானக் கிரியை சீவியாது. ஆகையால் கிரியையை யெழுப்புகிற கலையும் அறிவை யெழுப்புகிற வித்தையும் ஆசையை யெழுப்புகிற ராகமும் ஆசைப்பட்ட அவதரத்திலே மயக்குவிக்கிற மாயையும் நீங்கும். ஆக இவை பத்தும் நீங்கின அவதரம் கலாதிக்கியான நிராகரணம் நிராகரணம்.

அஞ்சாம் அவதரத்தில் பிராண வாயு இயங்கும் ஆகையால் இதனை நானென்றிருந்தாய். அதை நீயல்ல வென்று இசைவிக்க இதற்குப் பொருந்தி இவையிற்றை நீங்கவே தன்மாத்திரைகளைந்தும் கன்ம இந்திரியங்கள் ஐந்தும் வசனாதிகள் ஐந்தும் கரணங்கள் நாலும் வாக்குகள் நாலும் குணங்கள் மூன்றும் வித்தியாதத்துவங்களேழும் சுத்த தத்துவங்கள் ஐந்தும் வாயுக்கள் பத்தும் ஆக இவை முதலான தத்துவங்கள் தொண்ணூற்றாறும் நீங்கும். இவை நீங்கவே, சுத்த மாயை அசுத்த மாயையான மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னப்பட்ட அத்துவாக்களும் கன்மங்களும் நீங்கிற்று. இப்படிச் சர்வ உபாதிகளையும் கழன்றிருந்த அவதரம் தத்துவாதீதம்.

இப்படிப் பல அவதரமாகக் கருவிகளைக் கண்டு நேதி நேதி பண்ணி நின்று வந்த வழியைத் திரும்பப் பார்த்தவளவில் சகலமும் நீயாய் நின்ற அவதரம் சகலாவத்தையென்று கண்டு இவை நீ யல்லவாய் இவை உனக்குப் பிறிந்து தோன்றி இவையிற்றில் மீண்டுங் கூடாமல் நின்ற அவதரம் உனக்குச் சகலரென்னும் பேர் நீங்கிப் பிரளயாகலத்துவம் பிறந்ததெனக் கொள்க. இந்தத் தத்துவங்கள் நீங்கவே மூன்று வகைப்பட்ட கன்மங்களும் நீங்கினபடியாலே விஞ்ஞானகலத்துவம் பிறந்ததெனக் கொள்க.

என்று நிறுத்தி, இவையெல்லாம் ஒழிந்த இடத்திலே ஆடின பம்பரம் விசையற்றாற்போல விகற்பமற நின்ற சீடனை எழுப்பிச் செய்தி கேட்டவளவில் அவன் சொன்னபடி :



எனக்கு ஒன்றும் அறியத் தெரிந்ததில்லை யென்றான்.

ஒன்றும் அறியத் தெரிந்ததில்லையென்றவனே கேளாய். முன் நாம் பதி பசு பாசத்தின் உண்மையை விளங்கப் பாலித்தளவில் உடம்பறியுமென்றாயே. உடம்பறியாததுங் கண்டாயே. உடம்பறியாதென்றறிந்த தொன்றுண்டே?—உண்டு. அதுவுங் கண்டாயே ?—கண்டேன்.

பொறியறியு மென்றாயே பொறியறியாமலுங் கண்டாயே. பொறியறியாதென்றறிந்த தொன்றுண்டே?—உண்டு. அதுவுங் கண்டாயே?—கண்டேன்.

கரணங்கள் அறியுமென்றாயே. கரணங்கள் அறியாமலுங் கண்டாயே. கரணங்களறியாதென்று அறிந்ததொன்றுண்டே?—உண்டு. அதுவுங் கண்டாயே?—கண்டேன்.

குணங்கள் அறியு மென்றாயே. குணங்கள் அறியாமலுங் கண்டாயே. குணங்கள் அறியாதென்று அறிந்ததொன்றுண்டே ?—உண்டு. அதுவுங் கண்டாயே ?—கண்டேன்.

பிராணவாயு அறியு மென்றாயே பிராணவாயு அறியாமலுங் கண்டாயே. பிராணவாயு அறியாதென் றறிந்த தொன்றுண்டே ?—உண்டு. அதுவுங் கண்டாயே ?—கண்டேன்.

தத்துவாதீதமான அவதரத்திலே ஒன்றுந் தெரிந்ததில்லை யென்றாயே ?—என்றேன்.

அப்பொழுது உனக்கு ஒன்றுந் தெரியாதிருந்தது ஆணவ மலத்தின் மேலீடுகாண். ஆகையால் ஆணவமலமொழிந்து நீ கண்டதில்லையே. அது கேவல தேரிசனம். ஆகையால் கூடின தேகேந்திரியாதிகள் தனக்கு வேறாயிருக்கச் சிதேயும் இவையிற்றைத் தானென்றே அபிமானம் பண்ணின சகல அறிவும் பாசஞானம் ஆகையால் நீயல்லை. அவையிற்றை நேதி நேதி பண்ணப் பொருந்திக் கேவல தெரிசனம் பண்ணி நானென்று நின்ற பசுஞானம் உன் உண்மை ஆகையால் இனி இப்படிப்பட்ட கேவல முதல் முன்பு தேகம்

நானென்று நின்றுணர்த்த உணரும் முறைமைகள் அடைவே பார்த்துக் காண் என்ன, மீண்டு பார்த்துச் சொன்னபடி :

நானென்று வந்த அவதாரங்களை மீண்டு பார்த்தளவில் எனக்கொரு மயக்கங்களுமில்லை யென்றும் என்னாலே அறிந்து நீங்கப்பட்டபடியாலே சர்வமும் என்வழித்தா யிருந்ததென்றும் என்னுடைய அறிவொழிந்து வேறொரு அறிவுங் கண்டிலே னென்றும் அறிந்து தான் சிற்றறிவ னென்கிறது மாத்திரம் அறியாமல் மேலும் சீடன் சொல்லுவான் :

அறிகைக்குக் கருவிகள் உண்டா யிருந்தது அறிவேன் நானா யிருந்தது இனிக் கர்த்தா வென,

நீ கர்த்தாவாகில் கருவிகளைக் கொண்டறியவும் சுகதுக்க வேதனைப்படவும் வேணுமோ?

அதற்கென்ன? நான் செய்த கன்மம் நான் அனுபவித்தேனாகிறேன்.

நீ செய்த கன்மம் நீ அனுபவித்தபடி எப்படி?

ஒருவன் தான் செய்த வெள்ளாண்மை தான் அனுபவித்தாற் போலவாங் காண்.

வெள்ளாண்மை செய்தவனொருவன் இன்ன பயிர் செய்தோ மென்றும் இன்ன நாளிலே உதவு மென்றுங் கொண்டு வந்து அனுபவிக்கக் கண்டோமே?—கண்டோம்.

அதுபோல நீயும் இன்ன கன்மஞ் செய்தோ மென்றும் இன்ன நாளிலே அனுபவிப்போ மென்றும் அறிவாயோ?—அறியேன்.

கன்மந்தான் இன்னாரால் ஆர்ச்சிக்கப்பட்டதல்லவோ நாம் என்று வந்து கூடுமோ?—மாட்டாது.

ஆனால் இப்படி யிருப்பானேன்?

என்னுடைய அறியாமையாலும் கன்மம் சடமாகையாலும்.

இப்படி யிருக்க அறிந்து புசிக்கையுமுண்டோ?—உண்டு.



ஆதலால் கூட்டுவோன் ஒரு கர்த்தா உண்டாகவேணும்.

கன்மம் சடமாயிருக்க நானும் அறியாதவனுமாயிருக்கக் கூடினபடி எப்படி?

காந்தமும் பசாசமும் போல.

அதெங்ஙனே?—காந்தத்துக்கு வலித்துக்கொள்ள வல்ல தன்மை யுண்டே?—உண்டு.

இவை யிரண்டையும் ஒரு பையிலேயிட்டுக் கட்டிவைத்த போது காந்தமும் வலி கொடுத்த தில்லையே?—இல்லை.

இவை யிரண்டையும் வேறே ஒருவன் எடுத்து நின்றதே?—நின்றது.

அதுபோல உன்னையும் நீ செய்த கன்மத்தையும் பக்குவாபக்குவங்களறிந்து கூட்டிப் புசிப்பிப்பான் ஒரு கர்த்தா உண்டு காண்.

கர்த்தா கூட்டிப் புசிப்பிக்கிறபடி எப்படி?

பிருதிவி முதல் நாத மீறாக உள்ள தத்துவம் சடமாகையினாலே இவையிற்றைக் கிரியா சத்தியாலே பிரேரித்து ஆன்ம போதத்தையும் ஞானசக்தியினாலே யெழுப்பி ஆன்மாக்களைத் திருவடியிலே சேர்த்துக்கொள்ள வேணுமென்கிற இச்சா சத்தியாலே கன்மத்தைத் தொலைப்பிக்கை காரணமாகப் புசிப்பித்தருளும்.

இவன் புண்ணிய பாவங்களைத் தத்துவங்களுடனே கூட்டிப் புசிப்பிக்கிறபடி எப்படி?

ஒரு விடயத்தை ஒரு இந்திரியத்தாலே ஒரு பூதமிடமாக நின்று கண்டு மனாதிகளாலே பற்றிக் கலாதிகளாலே அறிந்து மாயையாலே மயங்கிப் பிரகிருதியாலே அழுந்தும். இப்படிப் புசிப்பிக்கையாலே கூடின இந்திரியங்களையும் பற்றுவிக்கிற மனாதிகளையும் அழுத்துவிக்கிற பிரகிருதியையும் இவையிற்றுடனே கூடிப் புசிக்கிற தன்னையும் புசிப்பிக்கிற கர்த்தாவையும் அறியாமல் நான் செய்தேன் பிறர் செய்தார்

என்கிற குற்றத்தாலே புனர்செனனத்தை யுண்டாக்கும். இப்படிப் புசிக்கையாலேறுகிற கன்மம் நீங்கும்படி எப்படியென்னில், இப்படிப் புசிக்கிற தன்னையும் புசிப்பிக்கிற கர்த்தாவையும் கூடி நிற்கிற தத்துவங்களையும் பார்த்து நாம் பண்ணின கன்ம மல்லவோ நாம் பொசிக்கிறோமென்றும் அவனவனது முன்னிலையாக வருகிறதுங் கர்த்தாவே நம்முடைய கன்மத்துக் கீடாகத் தருவனென்றும் அறிந்து தான் அந்தச் சுகதுக்கங்களிலே பிரியாப்பிரியப்பட்டு அவையிற்றாலே மொத்துண்ணாமல் உள்ளதே பொசிப்பென்றிருக்க மேல் ஆகாமியம் ஏறாது. செனனமும் எடாது.

இப்படி நிற்கிற கர்த்தா ஆன்மாவிடத்திலே நிற்கிறபடியும் கன்மம் பொசிப்பிக்கிறபடியும் எப்படி?

அறிவுக் கறிவாகத் தண்ணீரும் ரசமும் போல வேறற அத்துவிதமாக நின்று கண்ணும் ஆதித்தனும்போலக் கலந்து அறிவிப்பன். கர்த்தாவின் செயலொழிய உனக்கொரு செயலில்லையென்னும் அசுதந்தரம் இன்னமுங் கேளாய்: உன் கையிலே ஒருவர் சில பதார்த்தத்தைக் கொண்டு கொடுத்து இற்றைக்கொருபொழுது வைத்துத் தரவேணுமென்று தந்தார்களே, நீயும் வைத்துத் தருகிறோமென்று வாங்கி மடியிலே கட்டிக்கொண்டு நித்திரை பண்ணினாயே, அதை ஒருவன் அபகரித்துக்கொண்டு போனவளவில் கருவி கரணங்கள் தான் உன் வழித்தாயிருக்குமாகில் நம்முடைய கர்த்தாவின் கையிலேயல்லவோ? கட்டிக் கொடுத்தார்கள் என்று வாங்கிக் கொண்டதில்லையே?—இல்லை.

கருவிகளும் நீயும் கூடி நிற்கிறபோது இந்தக் கருவிகளை நீங்கக் கடவோமென்று நீங்கினதில்லையே?—இல்லை.

அந்தப் பதார்த்தம் போன பிறகு வைத்துத் தரச் சொல்லித் தந்தவர்கள் வந்து கேட்டவளவில் இன்னாரெடுத்துப் போனார்களென்றும் இந்நேரத்திலே போனதென்றும்



அறியாமல் அவர்க்கு உத்தாரஞ் சொல்ல மாட்டாமல் நீயிருந்து பரதவிக்கிறது மறிவாயே?—அறிவேன்.

ஆகையால் நீயும் உன் வசத்தல்லை. கருவி கரணங்களும் உன் வசத்தல்ல. ஆகையால் உன்னையுங் கருவி கரணங்களையுங் கன்மத்துக் கீடாகக் கூட்டியும் பிரித்துஞ் செய்கிற கர்த்தாவே உனக்குப் பிராணனாய் நிற்கிற பொருளெனக்கொள்க. இப்படி ஒரு கர்த்தா நின்றுணர்த்துவானென்று பல பிரகாரமாகச் சொல்லுகிறஇது உண்டென்கிற அனுமான மொழிந்து தெரிசனமாகாதோ வென்னில், முன் கேவல தெரிசனம் பண்ணி வைத்துச் சைதன்னிய தெரிசனம்; பண்ணுவித்தவளவில் நான் தானே கர்த்தாவென்று நீ அபிமானம் பண்ணினாயே அப்போது நீ கர்த்தாவல்லவென்று நாம் இசைவிக்க இதற்குப் பொருந்தி உன் கருவி கரணங்கள் உன் வசத்தென்ன இவை உன் வழித்தல்லவென்ன இதற்குப் பொருந்தியும் இவையிற்றுக்கு உடன்பட்டு நேதி நேதி பண்ணி வருகிறபோது உன்னறிவிலே ஓரறிவு பிரகாசித்ததே.

அறிவிலே அறிவு பிரகாசித்தபடி எப்படி?

நீ நேதி நேதி பண்ணி வருகிற கருவிகளின் தத்துவவுண்மைகளை நீ காணக்காண்கிறபோது அவையிற்றை உனக்குத் தெரிவித்து நீக்கி உன்னை நீ காண்கிறபோது உன்னையறியாமல் உன்னிடத்திலே மலரும் பக்குவத்திலே மணம் பிரகாசித்தாற்போலே பிரகாசித்து உன்னை உனக்குத் தெரிவித்து உனக்குப் புறம்பாய் நிற்கும். இப்படி நிற்கிற பொருள் சிவஞானம், இத்தை யறிகிறதே சிவஞான தெரிசனம். இதற்கு அறிவென்றும் சத்தியென்றும் அருளென்றும் பெயர். இப்படி அறிவே வடிவாக இருவென்று சொல்லி விழிப்பித்து வைத்த சீடனை அனுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி:

இப்படிப் பிரகாசித்த அறிவொழிந்து என்னுடைய அறிவு கண்டிலேனென்றான்.

ஆனால் அதுவே நிலை நில்லென்று அருளிச் செய்யச் சீடன் சொன்னபடி :

ஆனால் ஆன்மா நாசமென்றான்.

அருளிச் செய்தபடி : ஆன்மா நாசமல்லக்காண் ஆதித்தன் பிரகாசத்தினாலே மிகுதி பிரகாசியாதிருக்கிற நட்சத்திரம் போலே உன்னிடத்திலே பிரகாசித்த சிவஞானத்தின் மிகுதியாலே உன்னுடைய அறிவு தோன்றாமல் நின்றது காண். ஆகையால் இப்படி அகண்டிதமாகப் பிரகாசித்த பொருளே யொழியத் தோன்றாதிருப்பாயாக.

இப்படியே தன்னைக் கண்டபோது அருளைக் காணாமையும் அருளைக் கண்டபோது தன்னைக் காணாமலுமிருந்த சீடனை அனுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி :

இந்தப் பொருள் முற்பட்ட அவதாரம் இந்த அறிவே அகண்ட பரிபூரணமாய் நின்றறிந்திருந்ததென்றான்.

அப்படி நின்ற அறிவு பராசக்தி காண். இது பரை தெரிசனம். இந்தப் பரையில் பூரணமாய் ஒன்றுபடுதலே பரையில் வியாத்தமும் பரையோகமுமெனக் கொள்க. பரை ஞானத்திற் கூடுகிறதே சுத்தாவத்தையுமெனக் கொள்க. இப்படி நிற்கப்பட்டாநின்ற பரைக்கு முதலானதொரு நேயமுண்டுகாண்.

அகண்ட .பரிபூரணமான அறிவே யொழிந்து இதற்கு நேயமுண்டாய்ப் பிரயோசன மென்ன ?

இப்படிப் பூரணமான அறிவு தம்பிரானுடைய சக்தி காண்.

ஆனால் அந்த சத்தியே அமையாதோ ?

அல்லக்காண். சத்தியுடனே கலந்தாலும் சிவத்துடனே கூடினாலொழிந்து பிரயோசனமில்லை.



ஆனால் ஞானத்துக்கு முதலாகிய நேயம் கூடும்படி எப்படி ?

உன்னைத் தெரியாமல் மறைத்த ஆணவமலம் போமளவும் உன்னைத் தெரியாமல் அந்த மலம் அவிழ உன்னைத் தெரிசித்தாற் போலும் இந்தப் பரிபூரணமான அறிவிலே நின்றறிந்து நிற்கிறோமென்கிற கோட்பாடு போமளவும் நேயம் கூடாது. ஆனால் அந்தக் கோட்பாடு குலைந்து நேயம் கூடும்படி யெப்படி யென்னில் இப்படி அகண்ட பரிபூரணமாய் நிற்கிற அறிவிலே கலந்த நிலை அவிழ நிற்கவே நேயங்கூடும். இப்படிப் பரையதீதம் பிறந்ததே சாக்கிராதீதமெனக்கொள்க. இப்படி அகண்ட பரிபூரணமான பரைஞானத்தில் அழுந்தி நிற்பாயாக.

இப்படி நிலைபெற்றிருந்த சீடனை அனுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி :

அறிவிலே கலந்த நிலை அவிழ்ந்த அவதரத்திலே சுகம் பிரகாசித்துப் பிரகாசித்த சுகத்திலே ஓர் அவிழ்ச்சி வந்தது. அந்த அவிழ்ச்சியிலே பரமானந்தம் பிரகாசித்தது. அந்தப் பரமானந்தத்திலே அகண்ட பரிபூரணமா யிருந்ததென்று சொல்ல,

அருளிச் செய்தபடி: பரமானந்தத்தே அவிழ்ந்தபோது பிறந்த சுகரூபம் சிவானுபூதி. அவ்விடத்தில் உனக்கு வந்த அவிழ்ச்சி அந்த சுகரூபத்தின் மேலீட்டாலே வந்த பரவசம். இது சிவப்பேறு. மேல் இந்த அவசரத்திலே விளைந்த பரமானந்தங் காண் முற்பட நாம் கூடுமென்ற நேயம். இப்படி அகண்ட பரிபூரணமான அறிவானந்த சுக சொரூபமே பிரகாசித்திருக்கச்சிதே ஓரோர் காலம் முன்புபோலே தேகாதி பிரபஞ்சமும் முன் தோன்றின இந்திரியாதி விடயங்களும் சீவித்து முன் வாதனைப்பட்ட அவையெல்லா முகுத்தமாவா

னென்னில் இப்படித் தோன்றின முறைமைப் படாமை நிரூபித்துப் பார்ப்பாயாக.

தோன்றின பிரபஞ்சத்தை நிரூபித்துப் பார்த்திருந்த சீடனை அனுபவங் கேட்டவளவில் அவன் சொன்னபடி :

முன் நான் பெத்தனாய்த் திரிகிற காலத்திலே ஒருவன் அட்ட குலபர்வதங்களை அழைத்தேன் பார் என்று காட்டின போது எனக்கு ஒரு பயமுண்டாய் மெய்போலே தோன்றிற்று. பின்பு அவையெல்லாம் பொய்யென்றான். அது பொய்யாய் மீண்டுத் தோன்றிற்றுமில்லை. அது தோன்றின சடிதியும் மறைந்த சடிதியும் எனக்காச்சரியமாய் இன்னம் அப்படிக் காணவேணுமென்றேன். மீண்டும் அப்படித் தோற்றுவித்தான். இப்போது எனக்கு மெய்போலத் தோன்றுகிற தான இந்திரியாதிப் பிரபஞ்சமும் அப்படியிருந்தது.

முற்படத்தோன்றி மறைந்த இந்திரசாலம் பின்பு உன்னுடைய இச்சைக் கீடாகத் தோற்றினாற் போலே உனக்கு அனாதியேயுள்ள ஆணவமலத்தைப் போக்கி உன்னகத்திலும் அயிக்கமாய் வேறற நின்ற அறிவைப் பிரகாசிப்பித்து இப்போது விழித்த பரமானந்தத்தை அனுபவிக்கை காரணமாக உன்னுடைய அஞ்ஞானத்திலுண்டான குற்றதெண்டமான கன்மத்துக்கீடாக மாயையென்கிற முதலைத் தனுகரணபுவன போகமாக வகுக்கத் தோன்றின தோற்றத்துக்குவமை. அவன் தானே காட்டின இந்திர சாலமென்றறிந்து தனுகரண புவன போகங்களை யெல்லாம் நிராகரித்து விழித்ததற்குவமை உனக்குத் தோன்றின இந்திர ஞாலத்தை அவன் மாற்றினது. இப்பொழுது பழகிப் போந்த வாதனா போதத்தாலே பிராரத்த சேட மனுபோகங் காரணனாற் றோற்றின பிரபஞ்சத்துக் குவமையாவது பின்பு உன்னுடைய இச்சைக் கீடாகத் தோற்றுவித்த இந்திரசாலனால் இப்படித் தோற்றி விடுமோ ? முன் கண்ட இந்திரசாலமு நிற்கக் கண்டதில்லையே ? இல்லை.



அதுபோல இதுவும் நில்லாதெனக் கொள்க. பிராரத்த சேடம் பொசிக்கக் காரணனால் சத்தாதிகளை யறிகிறாயே, அந்த ரூபங்களை அறிகிறது எது ?

சட்சு முதலான இந்திரியங்கள்.

அந்த இந்திரியத்துடனே கூடி அறிகிறதெது? ஆன்மா.

அதற்குப் பிராணனாய் நின்றுணர்த்துகிறது எது ? தம்பிரானார் அருள்.

ஆகையால் இந்தத் தேக இந்திரியாதிப் பிரபஞ்சம் செடமே செடம், ஆன்மாத்தானென்று மறியாதவனே, பரம அருளே நின்றுணர்த்திப் பிரபஞ்சத்தைச் சீவிக்கவேணுமோ? —வேணும்.

ஆகையால் அப்பிரபஞ்சத்துக்கு ஒரு சேட்டை யுண்டாய் உனக்குத் தோற்றக் காட்டுவோமென்று தோற்றுகிறது மல்ல. நீயே யறிகைக் கறிவுண்டாய் நீ யறிந்து கூடுகிறது மல்ல. ஆகையால் சர்வமுந் தம்பிரானார் திருத்தொழிலெனக் கண்டு இவையிற்றில் பணியற்றிருப்பாயாக. நிட்டைதிரிந்தாற் கூடின வாதனையை மீண்டு பார்த்துச் செயலற நிற்பாயாக. இப்படி முபற்கோடு போலவும் ஆகாசப் பூப்போலவும் ஆமை மயிர்ப்படம் போலவும் பித்தனுக்குத் தோற்றுகிற போதம் போலவும் தோற்றி நீரிலெழுத்துப் போலவும் நிலைநில்லாத இவையிற்றில் நினைவற நிற்பாயாக. ஆகையால் இவை யிப்படித் தோற்றாம லுனக்கின்னமொரு மாற்றங் கேட்பாயாக. நரர் மிருக பசு பட்சி தாபரங்களாகத் தோற்றுகிற இவையிற்றில் தேகங்களைப் பாராமல் சீவித்த இந்திரியங்களைப் பார். இந்திரியங்களைப் பார்க்கவே சத்தாதிகள் மறையும். சத்தாதிகள் மறையவே பிரபஞ்சம் மறையும். இந்திரியங்களைப் பாராமல் இந்திரியத் துவாரா போதும் போதத்தைப் பார். போதத்தைப் பார்க்கவே இந்திரியாதிகள் மறையும். ஆன்ம போதங்களைப் பாராமல் அந்தப் போதங்களுக்

குப் பிராணனாய் நின்றுணர்த்துகிற அருளைப் பார். அருளைப் பார்க்கவே பாச ஞானம் பசு ஞான மிரண்டும் நீங்கும். அந்த அருளை அகண்டிதமாகக் காணமல் அகண்ட பரிபூரணமான பரஞானத்திலே நிறைந்து நின்றால் விளையும் அறியாத அறிவையே அறிவென அந்தச் சத்தியத்தை எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டு இருப்பாயாக. இப்படி யிருக்கிற உனக்குப் பராவுசிவனென்றும் பரமானந்தியென்றும் பெயர்.

இப்படி யென்றாலும் என்போல்வாராலும் வேதாகமங்களான நாலுணர்வுகளாலும் அறியப்படாப் பொருளைத் தேவரீர் உணர்த்துகைக்கு ஒற்றித்து வந்த திருப்படைவீடு சீகாழி யென்றும் திருநாமஞ் சிற்றம்பல நாடிகளென்றும் திருமேனி மானிட ரூபமாக எழுந்தருள வேணுமோ, அடியேனுக்குத் தன்மையிலே நின்ற நிலையிலே யுணர்த்தினாலாகாதோ ?

தன்மையி லுணர்த்துவது விஞ்ஞானகலர்க்கு, முன்னின்றுணர்த்துவது பிரளயாகலர்க்கு, நீ சகலனாகையாலே இப்படி வேண்டிற்றெனக் கொள்க. இப்பொழுது நீ பஞ்சமல மற்றவனாகையாலே விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் மூவரினு மல்லவாகையாலே உனக்குப் பேர் பராவுசிவனென்றும் சிவானுபோகனென்றுங் கொள்க.

---

[இந்நூல் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச்செய்த **துகளறு போத**மென்னும் அரிய சைவ சித்தாந்த நூலின் வழித்தாக இயற்றப்பட்டது. **துகளறுபோத**த்துட் கூறப்படும் அவதாரங்களை விளக்கப் புகுந்த இது **துகளறுபோதக் கட்டளை**யென்னும் பெயரால் சிற்றம்பலநாடிகளது வழிவந்தாரொருவரால் செய்யப்பட்டதென ஊகிக்க வேண்டியிருக்கிறது. இக்கட்டளைப் பிரதிகள் இரண்டு இராசாங்கத்துக் கைபெழுத்து நூல் நிலயத்துள்ளன. அவையே இப்பதிப்புக்கு ஆதாரமாயின.

—**S. அனவரத விநாயகம் பிள்ளை.**]

# தூத்துக்குடித் தலைமைப் பேருரை

[தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்
51-ம் ஆண்டு விழாவில் தலைமை வகித்த
திரு. C. M. இராமசந்திர செட்டியாரவர்கள் நிகழ்த்தியது]

(மலர் அ - இதழ் ௩ - கசுO-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப் பெருமான் அவ்வாறு அருளிச்செய்த திருப்பதிகங்கள் திவ்விய துதி ரூபமாக இருந்தன ; இனிய இசையில் பாடப்பட்டன. எப்பேர்ப்பட்ட கடின நெஞ்சையும் நல்லிசையானது இழுத்து உருக்கி விடுமன்றோ ? மற்றும் இளம் வயதில் பாடினால் அவ்விசைக்கு மேன்மை அதிகம் அல்லவா ? அவ்விதம் திவ்விய இன்னிசையில் பெருமான் பாடவும் அதைக் கேட்கப் பாக்கியம்செய்த பொது மக்கள் அவ்வின்ப சாகரத்தில் மூழ்கி யிருப்பார்களன்றோ ? அவ்விதம் ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும் மக்கள் காதுகளில் எப்போதும் அவ்வின்னிசைத் தேன் தித்தித்துக் கொண்டிருக்கு மல்லவா ?

மேலும், சம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகங்கள் சிவபெருமானுக்கு அருட்பாமாலைகளாக விளங்கியபடியால் அவைகளைக் கேட்ட மக்கள் எல்லாம் அவர் பாடியதைத் தாமும் பாடி நெஞ்சு குழைந்து குழைந்துருகிக்கொண்டிருப்பார்கள். இக்காலத்தில்கூட ஒரு சங்கீத வித்துவான் யாதொரு பொருட் சிறப்பும் இல்லாத பாடலை இன்னிசையில் பாடிவிட்டால், அதை நேரிலோ இசை இயந்திரத்தின் வழியாகவோ கேட்ட பொதுமக்கள் ஆடவரும் மாதராரும், சிறுவர் சிறுமியர்களும், தமக்குத்தாமே அதனை ஆனந்தமாகப் பாடிக்கொண்டு திரிவதில்லையா ? ஆகவே, சம்பந்தப் பெருமானுடைய திருப்பாடல்களை நேரில் கேட்ட அக்காலத்து

மக்கள் எவ்வளவு பாக்கிய சீலர்கள் ஆவார்கள்? அன்னார் நெஞ்சுகளில் அப்பாடல்கள் அமிழ்ந்து கிடக்கும்; அவை அவர்களது காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

அத்திவ்வியத் திருப்பாடல்கள் ஈசனுடைய அரும்பெருங் குணங்களை விரித்துக் கூறின. பொது மக்கள் எளிதில் அறியும் வண்ணம் அழகிய மொழிகளில் அக்கருத்துக்கள் பொலிந்து கிடந்தன. அவைகளைக் கேட்ட மாத்திரத்தில் சிவபெருமானுடைய அருட்பெருஞ் செயல்கள் மக்கள் மனதில் தோன்றிவிடும். படித்தற்கு அரிய கடும் மொழிகளில் சமயக் கொள்கைகளை எடுத்து எழுதினால் அந்நூல்களைப் படித்து ஆங்கு அடங்கியுள்ள அரிய பொருள்களைத் தெரிந்து கொள்வதற்குப் பாமர மக்களுக்குப் போதுமான அவகாசமும் மனோ நிலைமையும் இராது. ஆனால், அழகாகப் பாடத்தக்க திருப்பாசுரங்களில் சமயக் கொள்கைகள் கூறப்பட்டிருந்தால் அவைகளைப் பாமரமக்களும் எளிதில் அறிந்து கொள்வார்கள் அல்லவா?

இவ்விதமான ஒரு முறையையே ஏனைய சமயாசாரியர்களும் கைக்கொண்டிருந்தார்கள். புத்தபகவான் தம் கொள்கைகளை வெளியிட்ட காலத்து, பாமர ஜனங்கள் பேசி வந்த பாலி மொழியிலேயே அவைகளைத் தெளிவாக எடுத்துரைத்தார். அக்காலத்தில் நூல்களில் எழுதப்பட்டதும் பொது மக்கள் எளிதில் படித்தறியக் கூடாததுமான ஆரியச் செய்யுள் நடையில் அவர் உபதேசிக்கவில்லை. அதுபோலவே விவிலிய சமயாசிரியரும் பொதுமக்கள் எளிதில் தெரியக் கூடிய பேச்சு நடையிலேயே உபதேசம் செய்தார். முகமதிய நபிநாயகரும் தம் உபதேசங்களை அருள் வாக்கான அரபியப் பாட்டுகளால் வெளியிட்டார். இவ்வாறே எல்லாச் சமயத் தலைவர்களும் பொதுமக்களின் நெஞ்சுகளைக் கவர்ந்



திருக்கின்றார்கள். அதுபோலவே சம்பந்தப் பெருமானும் செய்தார்.

சம்பந்தப்பெருமான் அவதரித்ததற்கு முந்தி நமது நாட்டில் வழங்கிவந்த காப்பியங்கள் கடினமான நடையில் எழுதப்பெற்றிருந்தன. அவைகளுட் பெரும்பாலும் அகப்பொருள், புறப்பொருள், நீதி முதலான உலகியற் பொருள்களே மிகுந்திருந்தன. சமயச் சார்பான நூல்கள் எடுத்தாளப்பெறவில்லை. ஓரிரு சிறு நூல்களைத் தவிர வேறு சமயச்சார்பான நூல்கள் கிடையா. புலவர்கள், பொருள் வருவாய் ஒன்றினையே முதன்மையாகக் கொண்டு மன்னர்கள், தலைவர்கள் முதலான மனிதர்களையே புகழ்ந்து பாடினார்கள். அவைகளும் பிற புலவர்கள் மாத்திரம் மகிழ்ந்து போற்றவல்ல கடின நடையிலேயே பாடப்பெற்றன. ஆகவே பொதுமக்களுக்கு அவைகளால் பயன் ஏதும் இல்லை.

அவ்வாறு தமிழ்க்காப்பிய நெறி இருக்க, உயிருக்கு இருமையினும் உறுதி பயக்கக்கூடிய நன்மையைக் கோரியதும், பரம்பொருளிடத்து அன்பு பாராட்டியதுமான இனிய இசைச் செய்யுள்களால் திருப்பாசுரங்களை அருளிச்செய்ததினால் எம் மக்கள்தான் அவற்றிற்கு உருகார்கள்! எவர் தாம் அவற்றால் சீர்திருத்தம் அடையார்கள்!! அவ்விதத் திவ்விய செயலைச் செய்தன சம்பந்தப் பெருமானார் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்.

இவ்வருமையான முறையில் தற்காலத்தில் நம் சைவர்கள் ஈடுபடுகின்றார்களா எனக் கேட்கின்றேம்? சைவ சமயக் கொள்கைகளைப் பாமர ஜனங்கள் அறியும்படியாக யார் எடுத்துப் புகட்டுகின்றார்கள்? தகுந்த எளிய நூல்களை யார் எழுதி உதவியிருக்கின்றார்கள்? சைவத் திருமுறைகளாவது சித்தாந்த நூல்களாவது ஒவ்வொரு சைவர் வீட்டிலும், கையிலும் இருக்கும்படியாகச் சுலபமாகப் பதிப்பித்திருக்கின்றார்

ளா? சமீபகாலத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் செய்துவரும் பேர் உபகாரச் செயலாகிய அடக்க விலைப் பதிப்புகள் என்ற ஒரு செயலிலன்றி வேறு எச் சமாஜத்தார் இக்கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்? விவிலிய நூல் அம்மதத்தைச் சார்ந்த எவ்வாடவன், எப்பெண், எச் சிறுவன், எச்சிறுமி கையிலில்லை? ஞாயிற்றுக்கிழமை காலைகளில் ஒவ்வொருவராகக் கையில் அத்திவ்விய நூலை ஏந்திக்கொண்டு சுத்த உடையுடன் அவரவர்கள் ஆலயத்திற்குப் போவதைக் கண்டு நம் நெஞ்சு எவ்வாறு புலம்புகின்றது? சைவசமயிகளிடத்தில் எந்த யுகத்தில் அத்தகைய நிலைமை ஏற்படுமோ என்று ஏக்கமுண்டாகின்றது.

சம்பந்தப்பெருமான் தம் திருப்பாடல்களை இசையுடன் பாடி மக்களை அன்பு மேலிட்டவராகச் செய்தார். அதனை அறிந்த இராஜ ராஜர் முதலான சோழ அரசப் பெருமக்கள் தாம் நிலைநிறுத்தின அரும்பெரும் ஆலயங்களில் *திருப்

---

*திருப்பதிகம் ஓதுவித்தல்:—சில கல்வெட்டுகளின் உதாரணங்கள் :

1. சோழர்களில் முதல் முதல் ஓதுவித்தவர் பராந்தகர் 1 - 907 - 947, கி. பி.
2. இராச ராசேசுவரம் கட்டி அதில் "திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத் தெண்மரும்.................. நிலையாக" இருக்கச் செய்தவர் இராஜ ராஜர் 1 - 985 - 1016. கி. பி. (Vol. IV - 65)
3. குகூர் ஆம்ரவாணேசுவரர் (மாம்பழமுடையார்) ஆலயத்தில் அரசன் சௌக்கிய மடைவதற்காக திருப்பதியம் ஓதச்செய்தது. அதிராஜேந்திரன் 3-ம் ஆண்டு கி. பி. 1073 (280/17).
4. வேதாரணியம் ஆலயத்தில் திருப்பதியம் பாடியது. குலோத்துங்கர் 1. கி. பி- 1075 (422/04)



பதிகம் பாடுவதற்கென்று ஓதுவார்களை நியமித்து அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய தானங்களும் ஏனைய ஏற்பாடுகளும் செய்தார்கள். ஆலயம் செல்லும் மக்களை சமயபோதனைக்குள் ஆழச் செய்யவே அவ்விதம் ஏற்படுத்தி யிருந்தார்கள். இக்காலத்திலோ அவ்வேற்பாடு என்னகதி அடைந்திருக்கிறது என்ற செய்தி நமக்குத் தெரியும்.

நம்சிறுவர்கள் தேவாரதிகளைப் பண்ணோடு ஓதுவதற்கு ஏற்பாடு செய்தல்வேண்டும். நம் தமிழ்நாட்டில் பொறுக்கி எடுத்தாற்போல அங்கொன்று இங்கொன்றாகச் சில ஆலயங்கள் சார்பில் தேவார பாடசாலைகள் இருக்கின்றன. இவைகளால் வேண்டிய பயன் எய்தல் முடியுமா? ஒவ்வொரு ஆலயத்தையும் சார்ந்து ஒவ்வோர் தேவார பாடசாலை இருத்தல் வேண்டு மன்றோ?

**சித்தாந்த போதனை**

மிக அரிதில் அறிந்துகொள்ளக்கூடிய திருமந்திரத்தைத் தவிர சம்பந்தப்பெருமான் காலத்திற்கு முந்தி சைவ சித்தாந்த இலக்கணத்தைக் கூறும் தனித் தமிழ் நூல்கள் இருந்ததாகத் தெரியவில்லை. சம்பந்தப் பெருமானாவது அவரை அடுத்து வந்த ஏனைய சமயாசாரியர்களாவது தனித் தத்துவ நூல்கள் சைவ சமய தத்துவ நூல்கள் இயற்றவில்லை. 13-ம் நூற்றாண்டிற்றான் ஏற்பட்டன. ஆனால் சமயாசாரியர்கள் அத் தத்துவ உண்மைகளைத் தம் தேவாரதிகளில் ஆங்காங்கு குறித்துள்ளார்கள். பொன்னால் இயற்றப் பெற்ற நகைகளில் விலையுயர்ந்த கற்களை வேண்டிய இடத்தில் பதித்து எவ்வாறு அந்நகைகளின் அழகை அதிகரிக்கச் செய்கின்றார்களோ அது போலவே, தெய்வத் துதிகளாகிய தேவாரங்களில் நுணுக்கமான சித்தாந்தப் பொருள்களை அழகுடன் அமைத்து வைத்துள்ளார்கள். ஆகவே, அவைகளைப் பாடுகின்றவர்களின் மனதில் அவ்வுண்மைகள் ஆணித்திறம்போல் பதியத்தக்கன.

சம்பந்தப் பெருமான் அருளிய தேவாரங்களில் காணும் சைவசித்தாந்தக் கொள்கைகளிற் சிலவற்றை உதாரணங்களாக எடுத்துக் கூறுவோம். அவ்வுதாரணங்களை விளக்குவதற்காக சிவஞான போதச் சூத்திரங்களின் கருத்துக்களையும் குறிப்பிடுவோம்.

1 உலகம் சடம்; உள்ளபொருள்; கர்த்தா உடையது; கர்த்தா சங்கார காரணன்; முதற்காரணம் மாயை; முதற் கடவுள் அரன்.

“ இருநில னதுபுன லிடைமடி தரஎரி புகஎரி யதுமிகு
பெருவளி யினில்அவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட
இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவன் ”

—திருமறைக்காடு - திருவிராகம் செ. 7.

“ பிறவினொ டிறவு மானான் ” செ. 1.
“ தோற்றவன் கேடவன் ” செ. 2.

—திருஇடைமருதூர் - வியாழக் குறிஞ்சி.

“ விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை ”

—திருப்புறம்பயம் - திருவிராகம் செ. 3.

2 பெத்த உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரியும்; அத்தொழில்களுக்கு முதல்வன் உயிரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருப்பன்; தன் சத்தியோடும் இருப்பன்.

“ புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய் நிலன்ஐந்தாய்க்
(கரணம் நான்காய்,)
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு வாய்நின்றான் ”

—திருக்கழுமலம் - மேகராகக் குறிஞ்சி செ. 7.

“ உடலே உயிரே உணர்வே ”

—திருஅழுந்தூர் - இந்தளம் செ. 2.

“ ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே ”

—திருஇராமேச்சுரம் - காந்தார பஞ்சமம் செ. 9.



“ கருவினாலன்றியே கருவெலா மாயவன்
உருவினாலன்றியே உருவு செய்தான் ”

—திருத்தென் குடித்திட்டை கொல்லி செ. 3.

“ ஒருடம்புள்ளே உமையொரு பாகம் உடனாகி ”

—திருப்பரங்குன்றம் - குறிஞ்சி. செ. 3.

3 உயிர் உண்டு; அது உடல், பொறி, சூக்கும உடம்பு, பிராண வாயு, முதல்வன் இவைகளின் வேறு.

“ எற்றுநீர் தீக்காலு மேலைவிண் இயமானனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் ”

—திருமுதுகுன்றம் - பழந்தக்கராகம். செ. 2.

“ தாவி யவனுடன் இருந்துங் காணாத தற்பரன் ”

—திருக்கோளிலி - பழந்தக்கராகம் செ. 9.

“ பூவினில் வாசம் புனலில் பொற்புப் புதுவிரைச் சாந்தின்
இன் நாற்றம் ”

—திருவாலவாய் திருநள்ளாறு - நட்டபாடை செ. 4.

4 உயிரின் அறிவை மறைப்பது ஆணவம்; அதற்கு உதவுவது அந்தக் கரணம்; ஆனால் அது வேறு; உயிர் ஐந்து விதமாய் அறியும்.

“ அடியார்கள் தடுமாற்றம் வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கி
அருள் பெற்று வளர்வார். ”

—திருத்தோணிபுரம் - சாதாரி திருவிராகம் செ. 11.

“ அடிபணிந்தவர்கள் மேலைக் குற்றமதொழித்தருளும்
கொள்கையினன் ”

“ முன்னைய முதல்வினை அற அருளினர் ”

—திருப்புறவம் - சாதாரி திருவிராகம் செ. 5.

5 உயிரால் அதிஷ்டிக்கப் பட்ட கருவிகள், விஷயங்களை அளந்துஅறியும், அக்கருவிகள் உயிரை அறியா; உயிரே

அறியும்; உயிரும் முதல்வனை அறியாது; முதல்வன் உயிர்க்கு உணர்த்தினும் விகாரியாகான்.

6 சுட்டறிவால் அறியப் படுவது அசத்து; முதல்வன் எல்லாவற்றாலும் அறியப்பட மாட்டான்; முதல்வன் சிவசத்து.

“ஓதியாரும் அறிவாரில்லை ஓதி உலகெலாம்
சோதியாய் நிறைந்தான்”

—திருவையாறு - இந்தளம் செ. 7.

“மண்ணொடு நீர் அனல் காலோடு மதியிரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும்—பேராளன்”

—திருவெண்காடு - சீகாமரம் செ. 3.

“நிலம்தண் நீரோடு அனல்கால் விசும்பின் நீர்மையான்”

—திருஅரிசிற்கரைப்புத்தூர் - காந்தாரம் செ. 7.

“இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது”

—திருவைகாவூர் செ. 4.

7 சிவம் அசத்தினை அறியாது; உயிர் சத்து, அசத்து இரண்டினையும் அறியும்; ஆனால் இரண்டும் ஆகாது.

8 உயிர் தன்னியல் பறியாது கருவிகளால் மயங்கி நிற்கும்; சிவம் உயிர்க்கு அதன் இயல்பை உணர்த்தும்; உயிர் சிவம் நாடிச் செல்லும்.

“செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்”

—திருப்புள்ளிருக்கு வேளூர் - சீகாமரம் செ. 11.

9 சிவத்தை நாட உயிர் சிவோகம் பாவனை செய்யும், பஞ்சாக்ஷரம் மூலமாய்.

“வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித்திருந்த பாவம் தீர்க்கும்”

—திருவண்ணாமலை - தக்கேசி செ. 7.



“தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லித் துதித்து நின்று
அழுதுநிற்கும் அன்பு செய்வார் அல்லல் அறுப்பார்.”

—திருக்கானூர் - தக்கேசி செ. 11.

“காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.”

—நமச்சிவாயத் திருப்பதிகம் செ. 1.

10 சிவபணி வழுவாது செய்தல்வேண்டும்; அதனைச் செய்யும் உயிரை ஆணவம் தாக்காது; அதற்கு மாயா கன்மங்களும் இல்லை.

“நாச மாம்வினை நன்மை தான்வரும்—ஈசன்
கூசி வாழ்த்துதுங் குணம தாகவே.”

திருஇந்திர நீலப்பருப்பதம் - இந்தளம் செ. 4.

“கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்.”

—திருப்பாசூர் - காந்தாரம் செ. 3.

11 சிவம் உயிர்க்கு அறிந்தும் அறிவித்தும் உபகரிக்கும் சிவ நிஷ்டையில் நிற்பவரே சிவத்தின் சீபாதம் அடைவர்.

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்
பாலே போகாமே காவாப் பகையறும் வகைநினையா
கழுமல வளநகரே”

திருக்கழுமலம் - வியாழக் குறிஞ்சி செ. 7.

“ஒருரு வாயினை—நீள் நிலத்தே (திருவெழு கூற்றிருக்கை)

“மேவி லொன் றர்விரி கசைவுற்ற இரண்டினர் மூன்றுமாய்
நாவின் நாலர் உடலஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில் எட்டர் திருவாஞ்சியம் மேவிய செல்வனார்”

திருவாஞ்சியம் - இந்தளம் செ. 3.

என்னும் அடிகளில் மாதராடல் முதலியன எவ்வளவு அவரை ஆனந்திக்கச் செய்தன. இயற்கையாக உலகில் நடக்கும் பல செயல்களையும் வெகு குறிப்பாக நோக்கி அவைகளைப் பயன் படுத்தியுள்ளார்.

‘ புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வான் அமருங்கோயில்’

என்ற அடிகளில், மனிதனுடைய மரணத் தருணங்களை எவ்வளவு ஊன்றி நோக்கியிருக்கின்றார்.

நகைச்சுவை இல்லாவிடில் மனிதவாழ்வின் மகிழ்ச்சி எங்கே? ஆகவே புன் சிரிப்பை மனதின்கண் மிளிரச் செய்யும் சுபாவம் அவருக்கு எப்போதும் உண்டு.

‘ வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே’

‘ பட்டிசைந்த அல்குலாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாளொ ருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூடல்ஆல வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே’

என்பதில் எவ்வளவு இலகுவாகவும் இரம்மியமாகவும் பட்டும் படாததுமான நிந்தா ஸ்துதிபோலவும் திருவால வாய்க் கடவுளை ஏத்தியிருக்கின்றார்? இனி நமது பெருமான் இயமகம், திரிபு முதலான சொல்லணிகளிலும் குறைந்தவர் அல்லர். மேற்காட்டிய தேவாரத்தில் எத்துணை அழகாகத் திரிபைப் புகுத்தியிருக்கின்றார். திருமுக்கால், திருயமகம், மாலைமாற்று, மொழிமாற்று, மடக்கு, ஏகபாதம், இருக்குக் குறள், ஈரடிவைப்பு, முடுகுமிராகம், சக்கரம் முதலான சொல்லழகு



பொருந்திய பதிகங்களைத் தமிழ்மொழியில் முதல் முதலாக சம்பந்தரிடம் தான் காண்கிறோம். சந்தப் பாக்களும் முதல் முதலாக சம்பந்தரே இயற்றியுள்ளார். சந்தப் பாக்களுக்குச் சம்பந்தரே மூலபுருடர் என்று கூறவேண்டும். அவருக்குப் பின்னால்தான் சந்தப்பா விருத்தியடைந்து அருணகிரிநாதர் வாக்கில் பூரண மடைந்தது என்னலாம்.

புறப் பொருள்கள் மாத்திரமே யன்றி அகப்பொருள் பாடுவதிலும் கூட சம்பந்தர் குறைந்தவர் அல்லர். ஈசனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் வைத்து அகப்பொருள் துறையில்,

‘ பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ப
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே ’

என்ற அடிகளில் எவ்வளவு அழகாக உயர்ந்த கருத்தைப் போதித்துப் பாடியிருக்கின்றார். ஆகவே தத்துவ விசாரணையில் இருப்பவர்களும் உலகியற் சார்பில் இயற்கை அழகுகளையும் செயற்கை அழகுகளையும் அனுபவித்துப் மகிழ வேண்டும் என்பது சம்பந்தப் பெருமானால் வலியுறுத்தப் பெற்றது.

நாமும் அவ்வாறே இயற்கை அழகுகளிலும், விஞ்ஞானக் கலைகளிலும் நம்வாழ்நாளில் ஒரு பகுதியைச் செலவிட வேண்டியது அவசியமல்லவா? அப்போதுதான் வாழ்நாள் இனிமையுடன் விளங்கும். மகிழ்ச்சி இல்லாத வாழ்க்கையில் எத்துணை ஆன்மார்த்த ஒழுக்கம் இருப்பினும் அது யாதொரு பயனும் தாராமற் போகும். சம்பந்தப் பெருமான் இத்துறையிலும் ஓர் இன்றியமையாத படிப்பினையை நமக்குத் தந்திருக்கின்றார். அதனைப் பின்பற்றுவோமாக.

இயற்கை அழகுகள் மாத்திரமோ! செயற்கை அழகுகள் மாத்திரமோ! மற்றும் அக்காலத்தில் தம்மைச் சுற்றியுள்ள பழக்க வழக்கங்களையும் அறிந்து, அவைகளில் வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு வேண்டாதவற்றைக் கண்டித்திருக்கின்றார். இவ்வகையில் அவரை ஒரு சமகாலச் சரித ஆராய்ச்சியாளர் என்றே சொல்ல வேண்டும். தம்மைச் சுற்றிலும் பெருகி வளர்ந்திருந்த சமண பௌத்தர்களுடைய அருவருப்பான செயல்களையும் கொள்கைகளையும் ஒவ்வொரு பதிகத்திலும் எடுத்துக் காட்டிக் கண்டித்திருக்கின்றார். அக்காலத்தில் சமணர்களுடைய நடவடிக்கைகள் முழுவதும் அவர் தெரிந்துரைத்தார். மதுரைக்குச் சென்றபோது மதுரையைச் சுற்றியிருந்த ஆனைமலை முதலிய எண் பெருங் குன்றங்களில் வன் கண்ணரான சமணக் குரவர்கள் வசித்து வந்தார்கள் என்பதும், அவர்கள் சந்து சேனன், இந்து சேனன், தரும சேனன், கந்து சேனன், கனக சேனன், கனக நந்தி, புட்பநந்தி, பவணநந்தி, சுனகநந்தி, குனக நந்தி, திவன நந்தி முதலான பெயர்களை வைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும், "உண்டு இல்லை" "இல்லை உண்டு" என்ற மொழிகளால் தத்துவத்தை வெளியிட்டு வந்தார்கள் என்றும், கிளிவிருத்தம் எலிப்பாட்டு முதலியன பாடினார்கள் என்றும் (ஞமண, நமண முதலிய) பொருள் தெரியாத மந்திரங்களைச் செபித்து வந்தார்கள் என்றும், தலைபறித்தல், கையில் உண்ணல், பல் துலக்காமை முதலான ஆபாச வழக்கங்களைக் கொண்டிருந்தார்கள் என்றும் தெளிவாகக் கூறியிருத்தல் காண்க. ஆகவே பெருமானிடத்தே சரித்திர ஞானம் எத்துணை விரிந்து கிடந்தது பாருங்கள்!

சரித்திர
ஞானம்.

நாமும் பெருந்தகையாரைப் பின்பற்றி உண்மைச் சரித்

ல்லவா? முக்



கியமாக தற்காலத்தில் உலகில் இயங்கிவரும் ஏனைய சமயக் கொள்கைகளை ஆராய்ந்து அறிய வேண்டும். அவற்றோடு சைவ சமயத்தின் கோட்பாடுகளை ஒத்திட்டுப் பார்த்துத் தெளிவடைய வேண்டும். சமயத்தின் மேன்மையைப் புகட்டும்போது ஏனைய சமயங்களின் கோட்பாடுகளோடு ஒத்திட்டு உபதேசிக்க வேண்டும். அப்போது தான் இக்காலத்தில் நம் சமயக் கொள்கை செவ்வையாகப் படரும்.

சம்பந்தப் பெருந்தகையார் சைவ சமயம் தழைத்தோங்குமாறு நாடுகள் முழுவதிலும் சென்றுழைத்த காலத்தில் ஆங்காங்கு பகுத்தறிவுக்கு விரோதமாகத் தோன்றி வந்த சில பழக்கங்களைத் திருத்தம் செய்திருக்கின்றார்கள். சிவனடியார்கள் ஒத்த அன்பும் குணப் பெருமையும் வாய்ந்தவர்கள். ஆகவே அவர்களுட் பேதமிருக்க வொண்ணாது. சம்பந்தப் பெருமானார் நாட்டு சஞ்சாரம் செய்ய ஆரம்பித்த சிறிது காலத்திலேயே அவரது இசைக்குத் தகுந்தபடி யாழ் கூட்ட வல்லவரான திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவர் மனைவியார் மதங்க சூளாமணியாரும் அவருடன் சேர்ந்தார்கள். ஆலயங்கள் செல்லும்போதெல்லாம் பெருந்தகையார் பதிகம் பாடுகையில் யாழ்ப்பாணர் யாழில் இசைமீட்டுவர். இவ்வாறு பெருந்தகையாரது வாழ்நாள் முழுதும் கூடவேயிருந்து நல்லூர்ப் பெருமணத்தில் சம்பந்தப்பெருமான் சோதியில் கலந்தபோது யாழ்ப்பாணரும் கலந்தார். இதுமட்டுமோ! ஒரு தடவை திருநீலநக்க நாயனார் என்ற பிராமணோத்தமர் சம்பந்தப் பெருந்தகையாரை உபசரிக்கத் தமது திருமனைக்கு அழைத்தார். அவரது இல்லத்தில் யாழ்ப்பாணர் தங்க இடம் கிடைக்கவில்லை. பெருந்தகையார் திருநீலநக்கரை நோக்கி "யாழ்ப்பாணருக்கு இன்று தங்க ஓர் இடம் கொடுத்தருள்வீர்" என்று ஆணையிட அம்மறையவர் தமது இல்லத்தில்

சமூகவாழ்வில்
திருத்தங்கள்.

முத்தீ வளர்க்கும் வேதிகையின் அருகில் யாழ்ப்பாணரும் அவரது மனைவியாரும் தங்க இடமளித்தனர். இவ்வருஞ்செய்கைக்கு எவரும் தடை செய்திலர். இக்காலத்தில் இது கூடுமோ?

யாழ்ப்பாணர்கள் அக்காலத்திலேயே தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டவர்கள்; உயர்ந்த வகுப்பார்களுடைய இல்லங்களில் புகலாகாது; ஆலயத்துள் புக இயலாது. மதுரையில் பாணபத்திரர் ஆலயத்திற்குள் புக அஞ்சி வெளிவாயிலிலே நின்று யாழினை வாசித்தார் என்றும், சிவபெருமான் அருளாலே உள் சென்றார் என்றும் திருவிளையாடற் புராணம் குறிப்பாகக் காட்டுகின்றது. அப்படிப்பட்ட தாழ்ந்த நிலையில் வைக்கப்பெற்றிருந்த மரபினராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரை அவருடைய மனைவியாரோடு தம் கூடவே ஆலயங்களுக்கு இட்டுச் சென்றதும், திருநீலநக்கருடைய இல்லத்துள் வேதிகையின் பக்கத்தே அமரச் செய்ததும் விரிவான உன்னதக் கொள்கையைக் காட்டுவனவன்றோ? அதே காலத்தில் இருந்த அப்பர் சுவாமிகளான வேளாளர் அப்பூதியடிகள் என்ற அந்தணரால் பூசிக்கப்பெற்று அவருடன் கூட அமர்ந்து புசித்தார் என்றால், அது இக்காலத்தில் ஏன் கைக்கொள்ளப்படக் கூடாது?

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி"

என்ற அப்பர் வாக்கில் இவ்வுண்மை விளங்கி இருக்கிறதல்லவா?

இவ்விதமான விரிந்த மனோபாவத்தைக் காட்டும் செயல்களை எடுத்துச் சொன்னால் யாழ்ப்பாணரைப்



போலும் அப்பரைப்போலும் உயர்ந்த நிலை அடைந்தால் யாதொரு தடையும் வேண்டுவதில்லை; இக்காலத்தில் யார் அடைந்துள்ளார்கள்? ஆகவே, அச்செயல்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தற்காலத்தில் வாதிடுகிறார்கள். உலகில் மக்களை ஈடேற்றும் எண்ணத்துடன் அவதரித்த பெரியார்கள், ஒவ்வோர்செய்கையை உதாரணமாக எடுத்துக்காட்டுவார்களே யன்றித் தம் வாழ்நாள் முழுதும் அவ்விதச் சீர்திருத்தச் செய்கைகளால் நிரப்ப வேண்டிய அவசியம் இல்லை. பகுத்தறிவு படைத்திருக்கும் மக்கள் அவ்வுதாரணங்களால் உண்மை நோக்கங்களை அறிந்து அவைகளை நிலை நிறுத்த வேண்டுவது அவர்தம் கடமையாகும். பெரியார்களின் வாழ்க்கையை இவ்விதச் சிறு சம்பவங்களே பெரும்படிப் பினையாகப் புகட்ட வல்லவைகளாகும்.

மேலேகாட்டிய அருமைச் செயல்களெல்லாம் சம்பந்த சுவாமிகளுடைய இளமைப் பருவத்திலேயே நடந்தவை.

இளமையின் வலிமை

மூன்று ஆண்டு அளவுப் பாலராய் இருந்த போது அருள்பெற்றுப் பாடத்தொடங்கிப் பதினாறு ஆண்டு அளவில் தம் திருமணத்தின்போது நல்லூர்ப் பெருமணத்தில், சோதியில் கலந்ததிற்குள்ளாக அவரது எல்லா அற்புதங்களும் நிறைவேறின. எவ்வாறெனில், பதின்மூன்று ஆண்டு அளவில் பலநூறு ஆலயங்களுக்குச் சென்று பல்லாயிரம் பாடல்கள் பாடப்பெற்றன; நாடுமுழுதும் பரவியிருந்த சமண பௌத்தங்களை அறவே ஒழித்துச் சைவம் நிலைநிறுத்தப்பட்டது. இத்துணைக் குறுகிய காலத்தில் - இத்துணை இளம் வயதில் - இத்துணைப் பெரிய செய்கைகளை நிறைவேற்ற முடியுமா என்று இக்காலத்து மக்கள் ஐயுறலாம். ஆனால், பெரியார்களுடைய இயல்பு அத்தன்மையதே. எல்லாரும் செய்யத்தக்க காரியத்தில் பெருமை என்ன கிடைக்கின்றது? செய்தற்கு அரிய

காரியம் செய்பவரன்றோ பெரியார்களென்றார் தெய்வப் புலவனார்.

ஆங்கில நாட்டில், அழகிய கவிகளை இயற்றியவர்கள் சில இளைஞர்கள் என்று ஆங்கிலமொழி வரலாற்றினால் அறிகின்றோம். இக்காலத்திலும் கணிதம், பௌதிகஞானம் இவைகளில் வல்ல பல நிபுணர்கள் இளம் வயதிலேயே அந்நிபுணத்துவமுடையராயிருக்கக் கண்கூடாகப்பார்க்கின்றோம். ஆகவே, பெருந்தகையார் சரிதத்தில் இளமையிற் செய்ததாகக் கூறும் செயல்கள் கற்பனையல்ல.

மேலும், குறுகியகாலத்தில் பெருஞ்செயல்களைச் சாதிப்பதும் பெரியார்களின் இயல்பே. விவிலிய சமயாசாரியர் மூன்று ஆண்டு அளவில் தம் பெரும் சமயத்தைப் போதித்துப் பரப்பவில்லையா? திருநபியாரும் அவ்வாறே குறுகிய காலத்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்படுத்தவில்லையா? ஆகவே, சம்பந்தப் பெருந்தகையார் பதின்மூன்றாண்டளவில் நாடுமுழுவதிலும் சைவத்தை நாட்டிச் சமணபௌத்தங்களை ஒழித்துவிட்டது இயலாத காரியமல்ல.

நாமும் எவ்வித முயற்சியை மேற்கொண்ட போதிலும் அம்முயற்சியைக் குறுகிய காலத்திலேயே நிறைவேற்ற வேண்டும். தவறினால் நெடுநீர் என்னும் பகைவன் கையில் சிக்கி அழிவோம். சம்பந்தப் பெருமான் இளமையிலேயே அரிய காரியங்களைச் செய்தாற் போன்று நமது இளைஞர்களும் செய்தல் வேண்டுமன்றோ? சைவசமயம் இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிற தென்பதை அறிவீர்கள். பெரும்பான்மையானவர்கள் சைவர்கள் என்ற பெயர் மாத்திரத்தில் விளங்குகின்றார்கள்; சமயக்கொள்கைகளை அறியார்கள்; சமய ஒழுக்கங்களையும் பேணார்கள்; சமயத்திற்கு ஏற்காத வகையான பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளார்கள். அன்னார்களைச் சீர்திருத்தி நல்வழிக்குக் கொண்டுவரச் செய்ய



வல்லவர்கள் எவர்? நம் இளைஞர்களே என்று சம்பந்தப் பெருந்தகையார் தம்வாழ்நாளில் நடித்துக் காட்டியுள்ளார். ஆகவே, நம் சமயத்தை வலிமை பெறச்செய்து முற்போக்குக் கொண்டுவந்து தழைத்தோங்கச் செய்ய வல்லது இளைஞர் இயக்கமே யன்றோ?

*உயிர்களுக்கு இன்னல் விளையாமை*

இனி, சைவசமயத்திற்கு இன்றியமையாத அடிப்படையான தன்மை ஒன்று உண்டு. அதனைச் சைவ சமயிகளே மிகவும் புறக்கணித்து வருகின்றமையால் அதைப் பற்றிச் சொல்லாமல் இருக்கக் கூடவில்லை. வாயில்லாத தாழ்ந்த உயிரினங்களைத் தெய்வங்களின் பெயரால் வதைத்து அவற்றின் உடல்களை உண்ணும் பழக்கம் நம் தமிழ் நாட்டில் அதிகமாக நிலையூன்றிக் கிடக்கின்றது. உயிர்ப்பலி இடுதலைக் குறித்துச் சம்பந்தப் பெருந்தகையார் அதிகமாக வற்புறுத்திக் கண்டிக்கவில்லை. ஏனெனில் அக்காலத்தில் அவ்விதக் கண்டனம் அவசியமில்லாமல் இருந்தது. சமண பௌத்தர்களுடைய கொள்கைகளில் சிறந்தது அஹிம்சை. அவர்கள் உயிர்ப்பலி இடுதலையும் ஊன் உண்ணுதலையும் தள்ளியிருந்தார்கள். ஆகவே, சம்பந்தப் பெருமான் அதைப் பற்றி எடுத்துரைக்க வேண்டிய அவசியமே யில்லை. ஆனால் எப்படியோ பிற்காலத்தில் உயிர்ப் பலி இடும் வழக்கம் தென்னாட்டில் பாமர மக்களுள் அதிகமாகப் புகுந்து விட்டது. அவ் வழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதைக் காண ஒவ்வொருவரும் வருத்தப்பட வேண்டியதாகின்றது.

பொது வழக்கில் சைவம் என்ற பதத்தினாலேயே ஊன் உண்ணாத தன்மை என்று பாமர மக்களும் அறிவார்கள். இதே பொருள் வட நாட்டில் - முக்கியமாக வங்காளத்தில் வைணவம் என்ற பதத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. ஏனென்

ருல், அந்நாடுகளில் சாக்த சமயம் அதிகம். அச்சமயத்தார் உயிர்ப்பலி இடுதலை அதிகமாகக் கொண்டுள்ளார். அதற்கு எதிரிடையாக வைணவத்தைக் கொண்டு ஊன் உண்ணுதார் என்ற பொருளில் வைணவர்களை வணங்குகின்றார்கள். தென்னுட்டிலோ மேலே சொன்னபடி சைவத்திற்கு அப் பெருமை கிடைத்திருக்கின்றது.

ஆனுலோ, நாட்டுப் புறங்களில் கிராம தேவதைகளின் ஆலயங்களின் முன்னர் திருவிழாக் காலங்களில் இரத்தம் சொட்டும் கொடுவாளைக் கையில் ஏந்தி வாயற்ற பிராணிகளைத் தலை வெட்டி வீழ்த்தும் பூசாரியின் நெற்றியிலும் புஜங்களிலும் மார்பிலும் பட்டை பட்டையாகத் திருநீறு விளங்குவதைக் கண்டால் சைவத்தினுடைய பொருள் மாறிவிட்டதோ என்று ஐயுற வேண்டி வரும். வேளாண்மைக்காகப் பயன்படுத்தக் கூடிய ஆடு, கோழி முதலிய தீங்கற்ற பிறவிகளைத் தெய்வங்களின் பேரால் கதறக்கதற வெட்டி வீழ்த்துவதும், பின்னர் அவைகளின் உயிரற்ற உடல்களைச் சமைத்துத் தங்கள் வயிறுகளில் நிரப்புவதும், அக்காரணத்தினுலே தம்வயிறுகளை அப்பிறவிகளின் இடுகாடுகளாக ஆக்கிக் கொள்வதும் மிகவும் இழிவான தன்றே? இவைமனிதத் தன்மைக்குவிரோதமான செய்கைகள் அல்லவா? இக்காலத்தில் படிப்பும் நாகரிகமும் ஏறிக்கொண்டு வருகையில் இப்பழக்க வழக்கம் மாத்திரம் குறைந்த பாடில்லை. இது சைவமக்களுக்கு அழகா?

சமீப காலத்தில் சில ஸ்மார்த்த வைதீகர்கள் பல நூற்றுண்டுகளுக்கு முன் நின்றுபோன உயிர்ப்பலி யாகங்களை மறுபடியும் பழக்கத்திற்குக் கொண்டுவர முயன்றதை நாம் அறிவோம். அப்போது மனிதத் தன்மைக்கு விரோதமான அச் செய்கைகளை அந்தப் படித்த பேர்வழிகள் ஏன் செய்ய ஆரம்பிக்கின்றார்கள்? என்று ஒவ்வொரு பகுத்தறிவு கொண்ட மனிதனும் கேட்க ஆரம்பித்தான். அப்போது



தென்னுட்டில் பாமர மக்கள் செய்யும் இப்பாதகச் செயல்கள் நினைவுக்கு வந்தன. அதைப் பற்றிக் கணக்கெடுக்க வேண்டுமென்று சில அறிவாளிகள் தினசரித்தாள்களிலும் எழுதினுர்கள். சில சீவகாருண்ய சங்கத்தார்களும் முயற்சிகள் செய்தார்கள். கோவை ஜில்லாவில் உயிர்ப் பலி இடும் வழக்கம் எவ்வளவு பரவியிருக்கிறதென்று அறியவேண்டி ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தின் மூலம் நான் கணக்கெடுத்துப் பார்த்தேன். அக்கணக்கைக் கண்டவுடன் என் உடல் பதறியது; நெஞ்சு அழுங்கிற்று. இக்கொடிய பழக்கத்தினுல் அன்றோ பாமர மக்களின் நெஞ்சு இரத்தத்தைக் கண்டால் இரங்காது கடினம் அடைந்திருக்கிறது என்று அறிந்தேன். கோவை ஜில்லாவில் நூற்றுக்கணக்கான மானுடக் கொலைக் குற்றங்கள் ஏற்படுவதற்கு உயிர்ப்பலிகளே காரணம் என்று ஏன் கூறக்கூடாது? இனிக் கோவை ஜில்லாவில் எடுத்த கணக்கைச் சிறிது பார்ப்போம்.

| தாலுகா. | ஆலயம். | திருவிழா. | பலியிடும் எண். |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | பேரூர் குடலை மாரியம்மன் | எப்போதும் | மாதம் 100 ஆடு |
| | வடமதுரை சந்நியாசியப்பன் | ஷை | ,, 100 ஆடு |
| | மற்று மூன்று ஆலயங்கள் | | வருடம் 350 |
| அவிநாசி | கரவலூர் மாரியம்மன் | பங்குனி | 200 ஆடு<br>300 கோழி |
| | ஊஞ்சப்பாளையம் மாகாளியம்மன் | | 300 ஆடு |
| | கரையாம் பாளையம் ம[illegible] | | 200 ஆடு<br>4 எருமை<br>3000 ஆடு<br>1500 கோழி |

18/05

| | | | |
|---|---|---|---|
| பல்லடம் | 2 ஊர்கள் | | 150 ஆடு |
| பொள்ளாச்சி | சூலக்கல் மாரியம்மன் | மாசி | 200 ஆடு |
| கோபிசெட்டி பாளையம் | பண்ணாரி மாரியம்மன் | பங்குனி | 1000 ஆடு 100 எருமை |
| | மற்ற ஏழு ஊர்கள் | | 1000 ஆடு கணக்கில்லாக் கோழிகள் |
| பவானி | அந்தியூர் குருநாத சுவாமி | ஆடி | 2000 ஆடு 500 கோழி |
| ஈரோடு | சூரம்பட்டி வலசு மாகாளியம்மன் | மார்கழி | 1500 ஆடு |
| | கருங்கால் பாளையம் மாரியம்மன் | ஷை | 1000 ஆடு கோழிகள் |
| | மற்ற 10 ஊர்கள் | ஷை | 4000 ஆடுகள் அநேகக் கோழிகள் |
| தாராபுரம் | நாட்டாராயன் கோவில் | ஒவ்வொரு செவ்வாய் இரவு | 1000 ஆடு |
| உடுமலைப் பேட்டை | 13 கிராமங்கள் | | 1500 ஆடு தவிர கோழிகளும் எருமைகளும். |

மேலே சொன்னவை தவிர ஒவ்வொரு கிராமத்திலும் மாரியம்மன் கோயிலும் காளி கோயிலும் உண்டு. ஊர்த் தேவதை என்று தனியாக ஒரு தேவதையும் உண்டு. இவ்வாலயங்களில் வேனிற் காலங்களில் திருவிழாக்கள் நடைபெறும். அப்போது ஆயிரக்கணக்கான பலிகள் நடைபெறும். மார்கழி மாதத்தில் முனியப்பன் பண்டிகை என்று சொல்லி ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு ஆடு உயிர் துறக்கும். நாகர் நோன்பு என்று சொல்லிப் புற்றுகளில் கோழிகளை அறுத்துத் தலை போடுவதுண்டு. சிலகிராமங்களில் கூத்



தாண்டி, அண்ணன்மார் திருவிழா முதலிய விழாக்கள் நடைபெறும். அப்பொழுதும் ஆயிரம் ஆயிரமாய்ப் பிராணிகள் உயிர் துறக்கும். ஆகவே தெய்வங்களின் பெயரால் எத்தனை ஆயிரம் உயிர்கள் கொடிய வாளால் இறக்கின்றன. இவைகளைப் பார்த்துப் பார்த்துப் பாமரனுடைய நெஞ்சு ஏன் கடினமாகாது?

மேலே குறித்த கோவை ஜில்லாக் கணக்கை மற்ற ஜில்லாக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். செட்டி நாட்டில் ஐயனார் கோயில்களில் பயங்கரமான செங்கல் காறை உருவங்களைக் கண்ட மாத்திரத்தில் அவைகள் உண்ணும் திக்கற்ற உயிர்களின் கணக்கைக் கூறவேண்டுமா? பாண்டிய நாட்டு மறவர் கள்ளர் நாடுகளில் கறுப்புத் தெய்வங்களின் பயங்கர ஆலயங்களைக் கண்டால் அங்குநடக்கும் கொலைகளைக் குறித்துச் சொல்ல வேண்டுமா? தென்பாண்டி நாட்டில் எக் கிராமங்களில் பார்த்தாலும் மாடசாமிக் கோயில்களைப் பார்த்தவுடனே உயிர்க்கொலை ஞாபகம் நம்மைவிட்டு நீங்குமா? ஆகவே, சம்பந்தரால் மிகு சைவத்துறை விளங்கப் பெற்ற பாண்டிய நாட்டிலேயே இத் தன்மைய கொடிய உயிர்க் கொலைகள் நடந்தால் சைவ மக்களின் முயற்சிகள் எங்கே இருக்கின்றன?

அன்பர்களே! இக்கணக்குப் புள்ளிகளை விவரமாக எடுத்துக் கூறினதின் காரணம் இவ்வெண்ணத்தைச் சைவமக்களின் நெஞ்சுகளில் அழுத்த வேண்டு மென்பதே. இனியாவது ஊக்கம் பெற்று சமய விரோதமான செய்கைகள் கடவுளின் பெயரால் நடைபெறக்கூடாமல் தடுக்கவேண்டுவது சைவமக்களின் கடமையாகும். திருவள்ளுவர், சாந்தலிங்க மூர்த்திகள் இவர்களின் நன்மொழிகள் வீண் மொழிகள் ஆக வேண்டாம்.

சம்பந்தப் பெருந்தகையாரின் திருவாழ்வினால் இந்நில வுலகம் அறிந்த போதனைகளிற் சிலவற்றை எடுத்துக்கூறி, அவைகளினால் நாம் அறிந்துகொள்ளவேண்டிய பொருள்களை விரித்து, இனி நாம் செய்யவேண்டிய செய்கைகளையும் இதுகாறும் குறித்துள்ளேன். இன்னும் நாம் அறிய வேண்டியதும் செய்யவேண்டியதும் எத்துணையோ உண்டு. சிலவற்றையாவது நாம் ஒழுங்காகவும் திருத்தமாகவும் செய்வோமாகில் பெரும்பலன்களை அடைவோம். சைவமக்கள் வாசாகைங்கரியத்தில் அதிகமாகக் காலங் கழிக்காது செய்கைகளில் ஊக்கம் காட்டவேண்டும். நாடு முழுதும் உண்மைச் சமயம் பரப்ப வேண்டும். அப்போதுதான் பல்லாயிரக் கணக்கானவர்கள் சைவத்தைத் துறந்து புறம்பே போகார்கள்; சைவத்தில் உள்ளவர்களும் சைவத்தை அறியாது வீணர்கள் ஆகார்கள். நாம் இனி ஊக்கமாய் முயல்வோமாக!

இதுகாறும் என் புன்மொழிகளை அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்த உங்கள் பெருந் தன்மைக்காக நான் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்குத் தலைமை தந்து பெருமைப் படுத்தியதற்காகவும் மற்றொரு முறையும் நன்றி கூறுகிறேன்.

# இடையாறிடைமருதே

[தி. கி. நாராயணசாமி நாயடு]

இத்தொடர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருவிடையாற்றுப்பதிகச் செய்யுட்களின் ஈற்றிலுள்ளது; நடுநாட்டுத் தலங்களில் ஒன்றாகிய இவ்விடையாறு திருவெண்ணெய் நல்லூருக்கு மேற்கே மூன்று மைலில் பழய பெண்ணையின் கரையிலுள்ளது; பன்னிரு திருமுறைகளிலும் இப்பதிகம்



ஒன்றிலேதான் இத்தலக் குறிப்புளது. இப்பதிகம் ஊர்த்தொகை, நாட்டுத்தொகை, க்ஷேத்திரக்கோவைபோன்றிருத்தலின், இதன் தலைப்பு சில ஏடுகளில் *திருவிடையாற்றுத்தொகை என்று காணப்படுகிறது போலும்!

இத்தொடர்க்கு உரை ஆசிரியர்கள் 'திருவிடையாறு திருவிடைமருதூர்' என்று உரை கூறினார்கள். அவ்வுரை பொருந்தாமை வருமாறு: சுந்தரர் இரண்டு பதிகளை ஒன்று கூட்டி அருளிய பதிகத்திலுள்ள பகுதிகளாகிய திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் சமீபத்திலுள்ளனவாகவே காணப்படுகின்றன. இவ்வேதுவால் கொண்ட உரைப்படி பார்க்கின் இடையாறும் இடைமருதும் நெருங்கிய ஊர்களாதல் வேண்டும். ஆனால் இயற்கையில் அவை இருவேறு நாட்டிலிருக்கின்றன. இடைமருதுக்கு அண்மையில் இடையாறு இருக்கக்கூடுமோ எனின், இப்பதிக 2-ம் செய்யுளில், 'பெண்ணைத்தெண்ணீர் ஏற்றுமூரெய்த மானிடையாறிடை மருதே' யென வருதலின் இப்போது கொண்டுள்ள இடமே பொருந்துவதாகிறது. மற்றும் இடைமருது என்றொரு தலம் இடையாற்றுக்குச் சமீபத்தில் இல்லையாதலின் இப்பகுதிக்கு வேறு பொருளிருத்தல்வேண்டும். அதனை இத்தலச் சிவாலய கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அச்சிலை வரிகளில் ஒன்றான வீரபாண்டியாது வெட்டில் (No 282 of 29) 'நடுவில் மண்டலமான ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடி இடையாற்று நாட்டு இடையாற்று அனுமனுழான் அரையன் சுந்தரபாண்டியதேவன் இவ்வூரில் உடையார் திருமருதந்துறை உடையநாயனார் கோயிலில்' என்ற வரிகள் காணப்படுகின்றன. இச்சிலாலேகையால் இத்தொடர்க்கு இடையாற்று நாட்டிலுள்ள திருவிடையாற்றில் திருமருதந்துறையிலுள்ள இறைவரே! என்பது பெற்றாம். இவ்வுரை பொருந்துமாறு:

*சுவாமிநாத பண்டிதர் தேவாரப் பதிப்பு குறிப்பு பார்க்க.

சுந்தரர் நாட்டுத்தொகையில் 'மருகனாட்டு மருகல், கொண்டனாட்டுக் கொண்டல், குறுக்கைநாட்டுக் குறுக்கை, வெண்ணிக் கூற்றத்து வெண்ணி, நாங்கூர்நாட்டு நாங்கூர். நறையூர்நாட்டு நறையூர், மிழலைநாட்டு மிழலை, வெண்ணிநாட்டு மிழலை, பொன்னூர்நாட்டுப் பொன்னூர், புரிசைநாட்டுப் புரிசை, ஈழநாட்டு மாதோட்டம், சோழநாட்டுத் துருத்தி, வேளாநாட்டு வேளூர், விளத்தூர்நாட்டு விளத்தூர்' என்றருளிய விடத்தெல்லாம் நாடும் அதிலுள்ள பதியும் அருளியது பெற்றாம். மற்றும் அவரே 'வெண்ணெய்நல்லூ ரருட்டுறை, கச்சூர் ஆலக்கோயில், கருப்பறியலூர் கோகுடிக்கோயில், நரையூர் சித்தீச்சுரம்' என்று திருவாய்மலர்ந்த இடங்களில் ஊர் அருளி அங்கு இறைவர் எழுந்தருளிய ஆலயப் பெயரையும் அருளியதும் பெற்றாம். இம்முறையே இத்தொடரில் சுந்தரர் நாடு, ஊர் கோயில் முதலியவற்றின் பெயர்களைச் சுருக்கி செய்யுளுக்கு இசைய 'இடையா றிடைமருதே' என்று அருளினார் என்பது பொருந்தும்.

## திருவள்ளுவர் திருநாட் கழகம்

6, பவளக்காரத் தெரு, சென்னை.

# அறிக்கை

நந் தண்டமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில், ஞாயிறையுந் திங்களையும் மாமழையையும் போற்றி வந்ததுபோல் புலவர்களையும் போற்றிவருதல் பெருவழக்கா யிருந்தது. மலரவன்செய் வெற்றுடம்பு மாய்ந்துபோவதானும், வண்டமிழோர் பாவுடம்பு மாயாது புகழ்கொண்டு நின்று நிலவுவதானும் "மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்" என்று மதிப்பிட்டுக் கூறிய பெருமை தமிழ்நாட்டிற்கே உரித்தாம்.



அத்தகைய அரும்பெறற் புலவர்தம் நினைவு மறவாது மக்கள் உள்ளத்தே என்றும் நின்று நிலவச்செய்தல் நாட்டுத் தொண்டுகளில் ஒன்றாகும் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். ஞானிலம் போற்றும் நாடகப் புலவரான ஷேக்ஸ்பியர் என்பார்தம் திருநாளை, அது கொண்டன்றோ, ஆங்கிலேயர் ஆங்காங்குச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்! அவ்வாறே ஏனைய நாட்டினரும் தத்தம் நாட்டுப் பெரும்புலவர் நாட்களை வழாஅது கொண்டாடுகின்றன ரல்லரோ? அற்றாக, உலகப் புலவர்களின் நடுநாயக மாமணியாயும், ஒழுக்கத்திற்கு உறையுளாயும் தமிழ்மொழிக்கு உயிர் நிலையாயும் இலகும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவது தமிழரின் கடமையன்றோ? இதுகருதி இவ்வாண்டுமுதல் ஆண்டுதோறும் வள்ளுவர்தந் திருநாளாய வைகாசி அனுடத்தன்று வள்ளுவர் விழாக் கொண்டாடுதற்கான முறைகளைத் தேர்ந்து அமைப்பதற்காகவே இக்கழகம் கூட்டப்பட்டது. தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்கட்கும், தமிழ்மொழிக்கும் இயன்றவரையில் எத்துறையிலும் பணியாற்றி வருவதே இக்கழகத்தின் பொதுநோக்கமாயினும், இதன் சிறப்பான நோக்கங்கள் பின் வருவனவாம்:—

### இக்கழகத்தின் நோக்கங்கள் :

1. பொதுமறையாகிய திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டுதொறும் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தல்.

2. திருவள்ளுவர் திருநாளன்று ஆங்காங்கு ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

3. திருவள்ளுவர் பெயரால் ஒரு "நினைவு மலர்" அச்சிட்டு, திருநாளன்று அடக்க விலைக்குத் தருதல்.

4. இந்தியாவிலுள்ள திருந்தியமொழிகளில் எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்படாதிருக்கின்ற

தெனத் தெரிகிறதோ அந்தந்த மொழிகளில் மொழிபெயர்க்கச் செய்தல்.

5. சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்மொழியில் முதன்மையாகத் தேர்வு பெறும் மாணவர்களுக்கு நூல்கள், பதக்கங்கள் முதலிய பரிசுகளை யளித்தல்.

6. திருவள்ளுவர் பண்டசாலை யொன்று சென்னை நகரிலே நிறுவுதற்கான முறைகளைத் தேடியமைத்தல்.

7. எத்திறத்தார்க்கும் பொதுவாகப் பயன்படுமாறு தலைநகராகிய சென்னையின்கண் ஒரு மன்றம் அமைத்தல்.

8. ஒரு பொதுநூல்நிலையத்தை மன்றத்தி லமைத்தல்.

9. மன்றத்தின் நடுவே தெய்வப் புலவர் திருவள்ளுவரின் உருவச்சிலை யொன்றைப் பளிங்கினாற் செய்து நிறுத்துதல்.

மேற்கண்ட இந்நோக்கங்கள் எளிமையாகவும், இனிமையாகவும் நிறைவேறுதற் பொருட்டு இக்கழகத்தினுக்குப் பெருந்தொகையினரான உறுப்பினர்களை நாடெங்கும் சேர்த்தல் கட்டாயமாகும். சாதி சமய வேற்றுமையின்றி எல்லாரும் இக்கழகத்திற்கு உறுப்பினராகுந் தகுதியுடையவராவர். ஆண்டுக்குக் கட்டணம் 4 அணா செலுத்துவோர் இக் கழகத்தின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்படுவர். ரூ 5. கொடுப்பவர் இதற்கு வாழ்நாள் உறுப்பினராவர். ரூ 10-ம், அதற்கு மேலுங் கொடுப்பவர் காப்பாளர் (Patron) ஆவர்.

இவ்வாண்டு வள்ளுவர் விழா யுவஹூ வைகாசிமீ ௫-ம் நாள் (18-5-1935) நடைபெறும்.

இங்ஙனம் :

கா. நமச்சிவாய முதலியார், தலைவர்.
பா. கண்ணப்ப முதலியார், அமைச்சர்.

---

[குறிப்பு:—இந்தத் தொண்டில் அன்பர்களனைவரும் ஈடுபடுவார்களாக.—பத்திராசிரியர்.]



சிவனை ஐம்பொறியைவிட் டங்கணை சகல னைம்பொறியி னீங்கா னென்றும் ஒரோவழி யுளதாமாயின், அதற்குக் காரணம் இஃதென் பார் நீர்ப்பாசிபோ னீங்கி மலகன்மம் வரினென்றும், அது நீக்குதற் குபாயங் கூறுவார் நீங்கானை நினைந்து நீங்குமென்றுங் கூறினார். மலகன்மமெனவே, இனம்பற்றி மாயையுங் கொள்ளப்பட்டது.

*"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத—னன்கல னன்மக்கட் பேறு" என்றாற்போல நீங்கானை நீங்கு நினைக்கென்றதனால் வருகின்ற சூத்திரத்துக்குத் தோற்றுவாய் செய்ததூஉ மாயிற்று. இம்மூன்றுதாரணங்களும் முறையே திருவடி ஞானத்தைப் பெற்றவுயிர் புலனுணர்வின் மீடலில்லை யெனவும் மீடலிழுக்கா மெனவும் ஒரோவழிப் பயிற்சிவயத்தான் மீளவருமாயின் மீளாதவாறு செய்துகொள்ளற்பாற்றெனவுங் கூறித் தாய்தரையேயாமென்னும் ஏகாரப்பொருளை வலியுறுத்தி ஒரு பொருண்மேல் வந்தவாறு காண்க.

---

## ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழ லாம்பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே.

சூ—ஆன்மசுத்தி பண்ணுமா றுணர்த்துத னுதலிற்று.

சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று.

தம்முதல் குருவுமா யுணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனை செய்துணருமா றுணர்த்துமுகத்தான் ஐம்புலவேடரின் வளர்ந்த வாலாமை நீக்கி உயிர் தன்னைத் தூய்மைப்படுத்துமா றுணர்த்துதல் இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்து.

சூத்திரவியையும் இதனானே இனிது விளங்கும்.

சிவப்பிரகாசத்துத் தான் பணியை நீத்தலென் றோதப்படும் ஆன்மசுத்தியாவது இறைபணி நிற்கவென வருகின்ற சூத்திரத்திற் பெறற்பால தாகலானும், அழுக்கு நீக்கமே அறுவைக்குச் சுத்தியா

---

* திருக்குறள், வாழ்க்கைத் துணை நலம். ௧௦.

மாறுபோலப் பாசக்ஷயமே உயிர்க்குச் சுத்தியாவதன்றி வேறன்மையானும், பாசக்ஷயம் பண்ணுமுன்னர்ச் சுத்தியாதல் கூடாமையானும், வருகின்ற சூத்திரத்தின் கருத்தாய் நின்ற ஆன்மசுத்தி பண்ணுமாற்றைப் பதியை நாடியெனவுந் தண்ணிழலாம்பதி யெனவுஞ் சிவதரிசனம் பண்ணுமாறே யுணர்த்துதற் கெழுந்த இச்சூத்திரத்தின் கருத்தாகவைத் துரைத்த தென்னையோவென மலையற்க; சிவதரிசனத்தினிகழ்வது ஆன்மசுத்தி யென்னும் உடனிகழ்ச்சி யுணர்த்துதற்கும் தம்முள் வேறுபாடு சிறுபான்மை யுடையனவாய இவ்விரு சூத்திரமும் ஒரு பொருண்மேலனவென்ப துணர்த்துதற்கும் இவ்வாறுரைத்தாராகலின். அஃதங்ஙனமாக, ஆன்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையுமென்றலின், அக்காட்சியே அதற்கமையுஞ் சுத்தி யெற்றுக்கெனின், அஃதொக்கும். நிருவிகற்பமாய்க் காண்டலும், இரட்டுறக் காண்டலும், தெளியக்காண்டலு மெனக் காட்சி மூவகைப்படும். இம்மூன்றும் அதிபரிபக்குவமுடையார்க்குக் கேட்டமாத்திரையே ஒருங்கு நிகழுமாயினும் ஏனையோர்க்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலென்னுஞ் சோபான முறையினன்றி நிகழாமையின் அவரைநோக்கிச் சிவரூபத்தி னிகழும் ஆன்மதரிசனத்தின் பின்னாகச் சிவதரிசனத்தினிகழும் ஆன்மசுத்தியும் ஒருதலையான் வேண்டப்படுமென்றுணர்ந்து கொள்க. *"நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி—யாசையொடு மங்கு மிங்கு மாகியல மருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்." என வழிநூலாசிரியரும் இக்கருத்தேபற்றி யோதினார்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—

குறையுணர்வாகிய பசுவறிவானும் பாசவறிவானும் உணரப்படாத முதல்வனை அவனது திருவடிஞானத்தாற் றன்னறிவின்கண்ணே யாராய்ந்தறிக. அத்திருவடிஞானத்தான் நிலமுதலாதமீறாகிய பாசக்கூட்டம் நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரினியல்பிற்றாய்க் கழிவதென்றறிந்து நீங்கவே, அப்பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும்: அவ்வாறு பாசத்தை யொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து அவ்விதிப்படியறிந்து கணிக்கப்படும்.

* சிவஞானசித்தியார், எட்டாஞ்சூத்திரம் - ௩௧. பாசிபடு.



ஊனமென்பது அப்பொருட்டாதல் *"ஊனமேற் கிரியை வித்தை" என்பதனானறிக. இதனுள், ஊனக்கண்பாச முணராப் பதியை ஞானக்கண்ணினிற் சிந்தைநாடி யென்றது ஓரதிகரணம்; உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம் பதியென்றது ஓரதிகரணம்; விதியெண்ணுமஞ்செழுத்தே யென்றது ஓரதிகரணம் ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதல் அதிகரணம்

ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணாலே காண்கவென்றது.

மே—மேலைச்சூத்திரத்தோதியவாற்றான் முதல்வன் பாசவறிவால் நாடப்படுவ னல்லனாயினும் பசுவறிவால் நாடப்படுபவனென்றற்கு இழுக்கென்னை யெனச் சிவசமவாத சைவர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

அவன் வாக்கு மனாதீதகோசரமாய் நிற்றலான்.

ஏ—ஏனைஞானங்களா னறியப்படாது சிவஞானத்தானறியப்படுமென்றற்குப் பிரமாணமென்னையென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

ஆண்டுப்பொதுவகையாற் பெறப்பட்டதனை ஈண்டேதுவாக வைத்து வாக்குமனாதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்னும் அருத்தாபத்தியான் ஞானக்கண்ணாலே காணப்படுமென்பது தாமேபோதருமென மேற்கோளைச் சாதித்தார்.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனையறியேன் தேர்ந்தவகை—நாடிஅரன்
தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னும் எனஅறிவார் இன்று.

* சிவஞானசித்தியார், முதற்சூத்திரம் - ௬௫. ஞானமேயான.

உ—கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்றதென்னை பசுத்துவநீங்கியவழிச் சுட்டிறந்தறிவதாகிய உயிருணர்வு திருவடி ஞானத்தோடொப்பதாகலின், அதன்கட் கோசரமாதல் அமைவுடைத்துப்போலு மென்பாரை நோக்கி அவ்வுணர்வு விளங்குமாறுணர்த்துமுகத்தான் அவரை மறுத்து ஏதுப்பொருளை வலியுறுத்துதனுதலிற்று.

நாடியோ என்போ நரம்பு சீக் கோழையோ தேடி எனை அறியேன் தேர்ந்த வகை நாடி - நாடி முதலியவற்றுள் யான் யார் என்னைத் தேடியுமறிகின்றிலேனென்று இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சியறிவின்கண்ணே இதனைத் தெளிவிப்பதோரறிவு வேறுண்டெனஆராய்ந்துநோக்கி,— அரன் றன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணார் - அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய முதல்வனது திருவடிஞானத்தால் முதல்வனையு முணர்ந்து முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனமறியும் பொருளாகிய தம்மையு முணர்தலைச் செய்யாதார்,—என்னும் என அறிவார் இன்று - மற்றெவ்வியல்பினரென்று தம்மையறிய வல்லுநர் இம்முத்திகாலத்து.

நாடியென்றது இடை பிங்கலை முதலியவற்றை. நரம்பெனவேயடங்குமேனும் தலைமைபற்றி வேறுகூறினார். சீ புண்ணீர். கோழை ஐ. ஒற்றுமைபற்றி அரனதுஞானத்தை அரனென்றுபசரித்தார்.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோவென்ற உபலக்கணத்தால் ஏனைத் தத்துவ தாத்துவிகங்களினும் அவ்வாறு தெரிதல் கொள்ளப்படும். இது தம்மையறியுமா றுணர்த்துமுகத்தானே தலைவனையறிந்தபின் அறியப்படுவதாகிய தம்மறிவுகொண்டு தலைவனையறியுமாறு யாண்டையதென மறுத்து வலியுறுத்தவாறு காண்க.

> காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
> காட்டாய உள்ளத்தைக் கண்காணா—காட்டிய
> உள்ளந் தனைக்காணா உள்ளத்தின் கண்ணாய
> கள்வன் தான் உள்ளத்திற் காண்.

உ—எதிர் முகத்து ஒரு பொருளைக் கண்ட கண்ணே மறித்து நோக்கியவழி *வெரிந் புறத்துப் பொருளையுங் காண வல்லும், அதுபோல அங்ஙனந் தேர்ந்தறிதலைச் செய்த உயிரே தெளிந்தறிதலை

* வெரிந் = முதுகு.



யுஞ் செய்யவல்லுமென அமையுமென்பாரை நோக்கி அதனது மாட்டாமையை விளக்கி அரன்றன்னாலே காண்டலை வலியுறுத்துதனுதலிற்று.

காட்டிய கண்ணே தனைக் காணா - உயிராற் காட்டப்பட்டு ஒரு விடயத்தைக் காண்கின்ற கண்ணானது தன்னியல்பைக் காணமாட்டாது,—கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தைக் கண் காணா - தனக்கு அவ்விடயத்தைக் காண்பித்து முதலாய் நிற்கு முயிரையும் அதுகாணமாட்டாது,—காட்டிய உள்ளம் தனைக் காணா - அதுபோல முதல்வனால் மறைந்து நின்றுணர்த்தப்பட்டு ஒன்றனைத் தேர்ந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன்னியல்பையு மறியமாட்டாது, தன்னையுணர்த்தி நிற்கும் முதல்வனையு மறியமாட்டாது—உள்ளத்தின்கண் ஆய கள்வன் தான் - அத்தேர்ச்சி யறிவின்கண்ணும் உடனாய் நிற்குங் கள்வன் அம்முதல்வனாகலானே,—உள்ளத்தில் - காண் அவனை அவ்வறிவின் கண் வைத்து நாடித் தெளிவாயாக.

பின்வந்த வுள்ளம் ஈண்டுத் தேர்ச்சியறிவின் மேற்று. தோன்றாது நிற்றல் பற்றிக் கள்வனென்றார். கள்வனென்றது கண்ணுக்கு உயிர் மறைந்து நின்றே காட்டுவதாகலான் அது தன்னையும் உயிரையும் அறியமாட்டாவாயிற்று; அதுபோல் முதல்வன் இதுகாறு மறைந்து நின்றே யுணர்த்துதலின் உயிர் தன்னையு முதல்வனையும் அறியமாட்டாதாயிற் றென்பதுபட நின்ற குறிப்பு மொழி. உள்ளத்திற் காணவல்லார்க்கு அக்கள்ளந் தீர்தலின் தம்மையும் முதல்வனையுங் காண்டல் கூடு மென்பதாம். *"கள்ளரோ டில்ல முடையார் கலந்திடின்—வெள்ள வெளியாமென் றுந்தீபற" என்றதும் இக் கருத்து நோக்கி.

கண்ணுக்குக் காட்டாய வுள்ளத்தைக் கண் காணாவென உவமைக் கோதியவாறு பொருளினும் வருவித் துரைத்துக்கொள்க இஃதெடுத்துக்காட் டுவமை.

## இரண்டாமதிகரணம்

இனி அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரற்பாற்று.

* திருவுந்தியார். ௨௫.

**மே**—அம்முதலை ஞானக்கண்ணாலே காண்கவென் றுணர்த்திய வழி அந்த ஞானக்கண்ணைப் பெறுமாறு யாங்ஙனமென நிகழும் அவாய்நிலையை நீக்குதற்பொருட்டு மேலதற்கோர் புறனடையா யெழுந்த இச்சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

பாசமொருவத் தண்ணிழலாம் பதியென்புழிப் பாசமென்றது காரியப் பிரபஞ்சத்தை யென்பார் அசத்தாயுளவென்றும் சொற்பல் காமைப்பொருட்டு எதுப்பொருளை உருவகமுகத்தான் உடம்பொடு புணர்த்துக் காட்டுவார் பிரபஞ்சத்தை யென்றது வன்னபேதங்களை யென்றும், வியாபகப்பொருளுக்கு ஒருவுதலாவது உணர்ச்சி விசேட மேயாமென்பார் அசத்தென்றொழிய வென்றது காணவென்றும், தண்ணிழலாய் நிற்றல் புதிதன்றென்பார் உளதாய் நிற்பதென்றும், பதியென்றது ஆகுபெயராற் பதிஞானத்தின்மேனின்ற தென்பார் ஞானசொரூபமென்றும், இஃதநுபவத்தி னன்றிச் சொல்லளவை யின் அறிய வாராதென்பார் உணரற்பாற்றென்று முரைத்தார். இத னுட் பெறப்படு மேதுப்பொருளை ஏனையவற்றுட்போல மேற்கோ ளின் வேறுவைத்துக் காணுமாறு :

இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காணவுள தாய் நிற்பது ஞானசொரூப மென்றது வேற்றியல்பாகிய வன்ன பேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிகசொரூபமாந் துணையான் எனவரும்.

படிகசொரூபத்தைக் காட்டாது மறைத்து நின்ற வேற்று நிறங் களை இவை நிலையுதலிலவாகிய வேற்றுநிறங்களெனக் கண்டுநிற்பின் அவ்வழி நிலையுதலுடைத்தாய் விளங்கி நிற்பது பளிங்கினது சொரூ பமாமென்னு மொப்புமையான் நிலையுதலுடைய தற்சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள பிரபஞ்சத்தை இவை நிலையுதலுடையன வல்லவென்று விவேகித்தறியின் அங்ஙனம் நிராலம்பமயமாய் விளங்கித் தோன்றுவது ஞானசொரூபமென மேற் கொண்டது.

வன்னபேதமாவது சித்திரமெனக் கொண்டு சுவர்மேல்வைத் துரைத்தலுமொன்று.



அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலாவது ஆசிரியனறிவுறுத்த உபதேசப்பொருளினுறைத்து நின்று *"அட்ட குணமெட்டுச் சித்தி கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்— வெறுத்துநெறி யறுவகையுமே லொடுகீழடங்க"க் காரணரூபத்தினில் லாமையால் "வெறும்பொயென நினைந்திரு" த்தல்.

> நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
> தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்—அற்புதம்போ
> லானா வறிவா யளவிறந்து தோன்றானே
> வானே முதல்களையின் வந்து.

உ—அசத்தை அசத்தென்று கண்டொருவியவழித் தோன்று வது சூனியமேயன்றிப் பிறிதில்லை போலுமென்பாரைநோக்கி ஞான சொரூபத்தினியல்பு கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

நிர்க்குணன் ஆய் - அசுத்தப்பிரபஞ்சம்போல முக்குணரூபமா யளவிட்டறியப் படுவானுமல்லனாய்,—நின்மலன் ஆய் - முக்குணங் களைக் கடந்த மிச்சிரப்பிரபஞ்சம்போல மலகன்ம காரியரூபமா யறி யப்படுவானு மல்லனாய்,—நித்தியானந்தன் ஆய் - மலகன்மங்களையுங் கடந்த சுத்தப்பிரபஞ்சம்போல அநித்தியானந்தரூபனாயறியப் படு வானுமல்லனாய்,—தற்பரம் ஆய் - இம்மூன்றனோடுங் கூடிப் பொது வியல்புபற்றி அவ்வாறுணரப்படும் உயிர்போலன்றி அதற்குமேலாய்,— நின்ற தனி முதல்வன் - இவ்வாறு நிற்றலான் ஒன்றனியல்புபற்றி யறியப்படாத தனிமுதலாகிய இறைவன்,—வானே முதல் களையின்- ஆகாசமுதலிய அசத்தை அசத்தென்றுகண்டொருவியவழி,—அளவு இறந்து அற்புதம்போல் வந்து - பயின்றறிந்து வருந் தனது சுட்டறி வினளவினைக் கடத்தலான் இன்னதென்றறிய வாராத சூனியப் பொருள்போலத் தோன்றி,—ஆனா அறிவு ஆய்த் தோன்றானே- பின்னர்ச் சுட்டிறந்தறியுந் தன்னறிவின்க ணீங்காது நிலை பெறுவ தாய்ச் †"சோதிக்குட் சோதியாய்" விளங்கித் தோன்றான்கொல்லோ. தற்பரம் தனக்குப் பரமெனவிரியும். தன்னென்றது உயிரை. அற் புதம் ஈண்டுச் சூனியத்தின்மேற்று. முதற்கட் சூனியமாய்த் தோன்

---

* சிவஞானசித்தியார், ஒன்பதாஞ்சூத்திரம், சு. குறித்தடி.

† ஷை, எட்டாஞ்சூத்திரம். ௩அ. எங்குந்தா.

றினுஞ் சூனியமன்றென்பார் அற்புதம்போல் வந்தென்றார். ஆனுமை- நீங்காமை. வானே முதலெனவே தோற்றமுறைபற்றி வான் முதலாகிய பூதங்களும், ஒடுக்க முறைபற்றி வான்முதலாகிய ஏனைத்தத்துவங்களு மடங்கும். நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாயென்புழி ஆக்கச்சொல் உண்மைகுறித்து நின்றது வடமொழிமதம். அறிவாயென்புழி ஆக்கம் வேறுபாடு குறித்துநின்றது. ஒற்றுமைபற்றி முதல்வனது ஞானத்தை முதல்வனென்றுபசரித்தார்.

> சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
> சட்ட இனியுளது சத்தேகாண்—சுட்டி
> உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவம்
> புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்.

உ—வானே முதல் களைந்தவழி அங்ஙனந் தோன்றுவதும் வேறொன்றெனக் கோடும் ஞானசொரூபமென்றற்குப் பிரமாணமென்னையென்பாரை நோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்துஎன்ன - ஏகதேசவுணர்வாற் சுட்டியுணரப்படுவதாய பிரபஞ்சத்தை மேற்கூறியவாறே ஒரோவொன்றாகச் சுட்டி அசத்தென்று கண்டு கழித்துக்கொண்டு சென்றவழி,—இனிச் சட்ட உளது சத்தே காண் - முடிவின்கட் செம்மையே கோசரமாவது யாது அஃது அவ்வசத்தின் வேறாகிய சத்தேயாம் அதனையறிவாயாக. அற்றேல் அசத்தின் வேறாய் அங்ஙனந்தோன்றுஞ் சத்தாவது உயிரேயாமென அமையுமெனின்,— சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை - இதுகாறும் அசத்தோடு கூடிச் சுட்டியறிந்து வந்த நீ அசத்தின் வேறாய் அங்ஙனந்தோன்றுஞ் சத்தாவாயல்லை, அற்றேல் இச்சுட்டுணர்வு எனக்கு நீங்குவதின்றுபோலுமெனின்,—உண்மையைத் தைவம் புணர்ந்து - அசத்தின் வயப்பட்டு நின்று சுட்டியறிந்து வந்த நீ அதனையொழிந்து அங்ஙனந் தோன்றிய சத்தின் வயத்தினையாய் அதனைப் புணர்ந்தால்,—அதனால் பொய்விட்டுப் போம் - அப்புணர்ச்சியானே சுட்டுணர்வாகிய அப்பொது வியல்பு நின்னைவிட்டு நீங்கும். என்னவென்றது உபசார வழக்கு. சட்டவென்பது செப்பமுணர்த்தி நிற்பதோரகரவீற்றிடைச்சொல்; அது சட்டமென இழிவழக்கின் மகரவீறாய் மரீஇயிற்று.



தைவமாயென ஆக்கச்சொல் வருவித்துரைக்க. புணர்ந்தாலென்பது புணர்ந்தெனத் திரிந்தது. உண்மைக்குத் தைவமாதல் புணரினென உருபுமயக்கமாகக் கொண்டுரைப்பினுமமையும். பற்றறக் கழிந்தொழியுமென்பார் விடுமென்னாது விட்டுப்போமென்றார்.

> கண்டதை அன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
> அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப்—பண்டணைந்த
> ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனின் ஒண்கருட
> சானத்தில் தீர்விடம்போல் தான்.

உ—அசத்தை அசத்தென்று கண்டொழியுமாறும் ஒழிந்தவழி உண்மையைத் தைவம் புணருமாறும் புணர்ந்தவழி அதனாற் பொய் விட்டுப் போமாறும் யாங்ஙனமென்பாரை நோக்கி அவற்றைத் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

கண்டதை அன்று அன்று எனக்கண்டு அசத்து ஆய்விட்டு - சுட்டியுணரப்பட்ட பிரபஞ்சத்தை இது சத்தன்று இது சத்தன்றென ஒரோவொன்றாக வைத்து நோக்கி அசத்தென்றொழித்து,—ஆன்மாவில் அண்டனை ஆய்ந்து - அவ்வாறு கண்டொழிந்த தன்னறிவின்கண்ணே சுட்டுணர்வின்றி நின்ற கடவுளை ஆராய்ந்து,—உணர - சோகமெனப் பாவிப்பனாயின்,—உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு - அப்பாவகத்தான் அத்துவிதமாய் விளங்கித் தோன்று முதல்வனால் அநாதியாய்க் கூடிநின்ற பொதுவியல்பைத் தான் விட்டு நீங்குமாறு,—ஒண்கருட சானத்தின் தீர்விடம்போல் தான் - ஒள்ளிய கருடதியானத்தில் விளங்கித் தோன்றுங் கருடனால் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாம்.

கருடதியானமாவது யாதெனிற் கூறுதும்; ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்தியான்மிகம் எனக் கருடன் மூவகைப்படும். பொருடோறும் இவ்வாறு கண்டுகொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன், அதற்கதிதெய்வமாகிய மந்திரம் ஆதி தைவிக கருடன், அம்மந்திரம் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன்கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடன் எனப்படும். அம்மூன்றனுள் ஈண்டுக் கருடனென்றது கருடனுக்கு அதிதெய்வமாய மாந்திரிகனுள்ளத்தின் அதுபோல் வைத்துத் தியா

னஞ்செய்து கணிக்கப்படும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப்பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திரரூபமே தானாக அநன்னியபாவனை செய்து தன்னறிவு அதன்வயத்ததாம்படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம்மந்திரக்கண்கொண்டு பார்ப்பவே அஃதவ் விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின் அப்பாவனை ஈண்டைக் குவமையாயிற்று. புள்ளுவிலங்கு மாமுதலியவற்றுக்கெல்லாம் அதிதெய்வமந்திரமுளவென்பதூஉம், மந்திரங்களைக் கணிப்போன் படிகம்போல மந்திர சொரூபியாவனென்பதூஉம், சர்வஞ்ஞானோத்தர முதலியவற்றுட் காண்க. இதனானே கருடபாவனை அசத்தியமென்பார் மதம் போலியாயவாறு முணர்க. அல்லதூஉம், பாவனை போலியாயவழி அது பயன் தருமாறியாண்டையதென்றொழிக.

## மூன்றுமதிகரணம்

இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க வென்றது.

மே—ஆன்மாவைச் சுத்திபண்ணுதற்குப் பாசமொருவிய வழித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானசொரூபமொன்றே அமையுமாகலின் இவ்விடத்தில் இனிச்செய்யக்கடவதொன்றில்லையென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

மேற் பாசமொருவி ஆண்டுத் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானக் கண்ணாற் பதியைச் சிந்தை நாடியபின்னர் அவ்விடத்துத் திருவஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்கவென மேற்கொண்டது.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அற்றாகலினன்றே *"பின்னுமோசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க" என்றார் வழிநூலாசிரியருமென்க.

ஈண்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தையென்றது முத்திபஞ்சாக்கரத்தை. திருவஞ்செழுத்தாற் சாதிக்கப்படும்பொருளும் அதுவே யாகலான் வேறு வகுத்துக் கூறவேண்டாமையின், விதிப்படியென மாட்டெறிந்

* சிவஞானசித்தியார், ஒன்பதாஞ்சூத்திரம். க. பாசஞானத்தாலும்.



தொழிந்தார். இவ்வாறாசிரியர் மாட்டெறிந்ததூஉமுணராதார் சாதித்துநிற்குமுறை வேறே, ஓதும்முறை வேறேயெனச் சித்தாந்தவழக்கொடு முரணிக் கூறுவர். நிற்குமுறைமையும் ஓதுமுறைமையுந் தம்முளியைபில்வழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையதென்றொழிக. *மானதம் மந்தம் உரையெனக் கணிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதமெனப்படும் அறிவாற்கணித்தலே ஈண்டு உச்சரித்தலென்பார் சூத்திரத்துள் உச்சரிக்கவென்னாது எண்ணுகவென்றார். வடமொழிச் சூத்திரத்துத் தியானிக்கவென்றதும் அது. இன்னும் இதன்கட்படும் இயல்பெல்லாம், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சுவிடுதூது முதலியவற்றுட் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கெனக் கொள்க.

ஏ—அந்தரங்க வழிபாடாகலின் அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக்கண்டு வழிபடுமாற்றைச் சாரவைத் தோதற்பாலதாகிய இதனைச் சித்தசாதனமாய் ஈண்டு விதித்தல் எற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

வேம்புதின்ற புழு அதனையொருவிக் கரும்பைத் தலைப்பட்டு அதன்சுவை தெரிந்தவழியும் பயிற்சிவயத்தான் நோக்கிற்றை நோக்கி நிற்குமாறுபோல அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்ட உயிர்களுக்கு அதனான் ஞானசொரூபம் விளங்கி ஞேயங்காட்சிப்பட்ட விடத்தும் அவை பயிற்சிவயத்தாற் பண்டைச்சிற்றுணர்வை நோக்கி நிற்குமாகலின் அவ்வாதனை நீக்குதற்பொருட்டு ஈண்டைக்கு வேண்டப்படுதலான் இனி ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யிவ்விடத்துச்சரிக்கவென மேற்கொண்டதெனக்கொள்க. இவ்விடத்தென்றதனால் அணைந்தோர் தன்மையைச் சாரவைத்து மேற்சோடற்குரிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தையென வருவித்துரைத்துக்கொள்க. எனக்கொள்கவென்று உடம்படுப்பித்ததும் அதுபற்றி. இக்கருத்து

* உரை, மந்தம், மானதங்களை முறையே வாசிகோபாம்ஶுமாநஸம் என வடநூலார் கூறுவர்.

நோக்கியன்றே புடைநூலாசிரியர் அஞ்செழுத்தருணிலையை ஆன்ம லாபத்தின் பின்னாக அணைந்தோர் தன்மையைச் சாரவைத் தோதியதூஉமென்க. *"வானோக்கி வாழும்" "கோனோக்கி வாழும்" என்றாற்போல ஈண்டு நோக்கென்றது மனவெழுச்சி விசேடத்தை. பிரகாசித்தவழியென்பது பிரகாசித்தெனத் திரிந்தது.

ஈண்டு ஞானமென்றது அசத்தை அசத்தென்று கண்டவழி விளங்குவதெனப்பட்ட ஞானசொரூபத்தை; அஞ்ஞானமென்றது அதற்கு மறுதலையாகிய சுட்டுணர்வையென வுணர்க. அது நீக்குதற்கெனக் கொள்கவெனவே, சித்தசாதனமன்றென்பதும் பெறப்பட்டது.

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு.

உ—இஃதவ்வாசனையை நீக்குதற்குச் சாதனமாமா றியாங்ஙனமென்பாரை நோக்கி அஃதாமாறு கூறி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு - உயிர் சிவனுக்குடைமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்குமுறையில் வைத்து நோக்கி,—இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து - தன்னுடம்பகத்தே இதயம் உந்தி புருவநடுவென்னும் மூன்றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசை செய்யுமுறைப்படி இதயபங்கயத்தில் அவ்வஞ்செழுத்தாலமைந்த திருமேனியில் அம்முதல்வனைக் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறை அருள் அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அம்மனுவாலர்ச்சனைசெய்து,—அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமம்செய்து - அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான உந்தியில் ஞானவனலையெழுப்பி அதன்கண் விந்துத்தானத் தமிழ்தமாகிய நெய்யைச்சுழுமுனைநாடி இடைநாடியாகிய சுருக்குச் சுருவங்களாலோமித்து,—கோதண்டம் சானிக்கில் -

* திருக்குறள், செங்கோன்மை. ௨.



விந்துத்தானமாகிய புருவநடுவிற் சிகர யகர வகரங்கண் மூன்றும் முறையே தற்பதப்பொருளும் துவம்பதப்பொருளும் அசிபதப்பொருளுமாம் முறைமைநோக்கி அதனாற் சிவோகம்பாவனை செய்வனாயின்,—அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம் - அப்பாவனைக்கண் விளங்கித் தோன்றுவன் அப்பாவகன் அவனுக்குச் சேடசேடிய பாவகத்தால் அடிமையாவன்.

ஓமித்தலுந் தியானித்தலும் பூசைக்கங்கமெனவறிக. ஞானசொரூபம் விளங்கிய வழியும் பயிற்சிவயத்தான் ஏகத்தேசப்பட்டுப் புறத்திற் செல்ல நோக்குவதாய தன்னறிவை அங்ஙனமாகாதவாறு மடக்கி அகத்தே ஒருகுறியின்கணிறுத்தி நிட்டை கூடும்படி அஞ்செழுத்தோதுமுறையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்க அஃது அந்நோக்கத்தைப் பற்றறக்கெடுத்து ஞானசொரூபத்தை இனிது விளக்கிப் பூரண நிலையிற் கொண்டு செலுத்துமாகலின் இஃது ஈண்டைக்குச் சிறந்தசாதனமாயிற்றென்பது.

இந்துவில் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையில் காணில் சிவன்கண்ணும்—உந்தவே
காட்டாக்கில் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆள் தானும் ஓதஞ் செழுத்து.

உ.—அங்ஙனம் ஒருகுறியின்கண் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் செல்லாதவாறும், அவ்வாறு கண்டவழி முதல்வன் தன்மாட்டு விளங்கித் தோன்றுமாறும், தோன்றியவழித் தான் அம்முதல்வனுக் கடிமையாமாறும் உவமையில் வைத்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு - அந்தரத்தியங்கு நவக்கோள்களுள் ஏனையபோலக் காணப்படாத இராகு கேதுக்களை உபராகத்திற் சந்திராதித்தர்மாட்டுக் கண்டாற்போல,—சிந்தையில் காணில் - முப்பொருள்களுள் யானிதனை யறிந்தேன் அறிகின்றிலேன் என்னுமுணர்விற்கு விடயமாகிய பசுபாசங்களோடொப்ப வேறுணரப்படாத முதல்வனைத் தன் னிதயபங்கயத்தின் அஞ்செழுத்தின் முறையின் வைத்துக் காணுமாயின்,—உந்தவே காட்டாக்கில் சிவன் தோன்றிக்கண் ஆம் - கோலைநட்டுக் கயிற்றினாற் சுற்றிக் கடையவே காட்டத்தினின்று அங்கி தோன்றுமாறுபோல

அம்முதல்வன் ஆண்டுத்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்பன்,—தான்கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம் - அப்பொழுது தானும் எரிசேர்ந்த இரும்புபோலத் தனது சுதந்திரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடிமையாம்,—அஞ்செழுத்து ஓது - ஆகலான் அத்திருவஞ்செழுத்தை விதிப்படியோதுவாயாக.

கேது சாயாக்கிரகமாகலின், வேறுகூறாராயினர். கண் அறிவு. தோன்றியாமெனவியையும். உந்துதல் ஈண்டுக் கடைதன்மேற்று. காட்டாக்கி வடமொழிச்சிதைவு. இகரம் விகாரத்தாற்றொக்கது. ஈண்டும் ஓதஞ்செழுத்து என்றது வலியுறுத்தவாறு.

மண்முதல் நாளம்மலர் வித்தை கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும்—நண்ணில்
கலைஉருவாம் நாதமாம் சத்தியதன் கண்ணும்
நிலைஅதிலாம் அச்சிவன்தாள் நேர்.

உ—தத்துவ முப்பத்தாறுக்கும் மேற்பட்ட முதல்வனை இதயபங்கயத்திற் கண்டர்ச்சிக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி அவ்விதயபங்கயத்தி னியல்புணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

நண்ணில் - அவ்விதயபங்கயத்தினியல்பை அறியப்புகின்—மண்முதல் நாளம் - நிலமுதலிய இருபத்துநான்கு தத்துவமும் உந்தியினின்றுந்தோன்றி எண்விரலளவைத்தாயுள்ள நாளவடிவாம்,—வித்தை மலர் - வித்தியாதத்துவங்களேழுஞ் சுத்தவித்தையுமென்னும் எட்டுத்தத்துவமும் எட்டிதழ்வடிவாம், எண்ணிய ஈசர் சதாசிவமும் கலாரூபம் - அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசரஞ் சதாசிவமென்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான்கெனப்படுங் கேசரவடிவாம்,—சத்தி கலை உருவாம் - சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய பொகுட்டுவடிவாம்,—நாதம் அதன் கண்ணும் - சிவதத்துவம் அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு வீசவடிவாம்,—அதில் அச்சிவன் தாள் நிலையாம் - ஆகலான் அவ்வியல்பிற்றாகிய இதயபங்கயத்தின் முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகவுடைய அச்சிவனது சத்தி நிலைபெறும்,—நேர் - அதனையறிந்து திருவஞ்செழுத்தால் அர்ச்சிப்பாயாக.



இதனானே *“அண்டபிண்டமவை சமமாதலால்.” புறத்[illegible] காணப்படும் முப்பத்தாறு தத்துவமும் அகத்தினிற் சூக்குமமாயு[illegible]டென்பது காட்டி முதல்வனுக்கு இந்நிலையே அந்நிலையெனத் தெளிவித்தவாறு. வித்தையென்பது இரட்டுற மொழிதலான் அவ்வாறுரைக்கப்பட்டது. சிவஞானசித்தியில் †“மூட்டு மோகினி சுத்த வித்தை மலரெட்டாய்” என்புழி மோகினி யென்றதூஉம் ஆகுபெயரான் அதன் காரியமாய கலாதிகளின்மேனின்றது. இவ்வாறன்றி, நிலமுதலிய முப்பத்தொரு தத்துவமெனப்படும் எட்டுக்கொத்தும் எண்விரனாளவடிவும், அசுத்தமாயாதத்துவம் நாளத்துக்கும் மலருக்கும் நடுக்கண்டமாகிய கிரந்திவடிவும், அதற்குமேற் சுத்தவித்தையின் வாமைமுதலிய வெட்டும் எட்டிதழ்வடிவுமா மென்றுரைப்பாரும், முப்பத்தொன்றுக்குமேல் அசுத்தமாயை கிரந்தியின் அதச்சதனம், சுத்தமாயை ஊர்த்துவச்சதனம், அதற்குமேல் ஈசுரதத்துவத்தில் அனந்தன் முதலியவெட்டும் எட்டிதழ்வடிவம், சதாசிவதத்துவமொன்றுங் கேசரவடிவ மெனக்கொண்டு, அதற்கியையக் கொண்டுகூட்டி யுரைப்பாரும், கலாரூபமென்றது பஞ்சகலைகளையெனவும், அஃதியாண்டுங் கூட்டி யுரைக்கப்படுமெனவுங் கொண்டு, மண்முதனாள மலரொன்பதற்கு மண்ணாகிய நிவிர்த்திகலாரூபம் நாளமும், மண்ணை முதலாகவுடைய ஏனை யிருபத்துமூன்று தத்துவமாகிய பிரதிட்டாகலாரூபம் மலருமாமெனவும், வித்தை யெண்ணிய வீசர் சதாசிவமுங் கலையுருவமா மென்பதற்கு வித்தியாதத்துவமாகிய வித்தியாகலாரூபங் கலையெனப்படுங் கேசரமுஞ், சுத்தவித்தையோடு கூடி யெண்ணப்பட்ட ஈசுரதத்துவஞ் சதாசிவதத்துவமாகிய சாந்திகலாரூபங் கலைக்குளுருவெனப்படும் பொகுட்டுமாமெனவும், நாதமாஞ்சத்தி யதன்கண்ணு மென்பதற்குச் சிவதத்துவஞ் சத்திதத்துவமாகிய சாந்தியதீதகலாரூபம் பொகுட்டின்கண்ணாகிய வீசமாமெனவும் உரைப்பாருமுளர். இவையெல்லாம் அவ்வவ்வாகமபேதம்பற்றிக் கொள்ளப்படும்.

* கோயிற்புராணம், பதஞ்சலிச்சருக்கம். ௭௦. வலங்கைமான்.
† ஒன்பதாஞ்சூத்திரம். கூ. நாட்டுமிதய.

அம்மு கலை அறுபத்துநான்காகலான், அறுபத்துநான்காகிய கேசரந் தாளுக்குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆகுபெயராயிற்று. இது நாள முதலாக மேனோக்கித் தோன்றும் உலகத்துக் கமலம்போலாது கண் முதலாகக் கீழ்நோக்கித் தோன்றியதோர் திப்பிய கமலமெனக் கொள்க. சிவன்றுளதினிலையாமெனவே சிவன் சத்திக்கு மேலாய் நிற்பன் என்பதூஉம் பெறப்படும்.

---

# பயனியல்

## பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

சூ—பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்து தனுதலிற்று.

சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

மேல் ஏழாஞ்சூத்திரமுதலிய மூன்றானும் முறையே சாதிக்கும் பொருளதியல்புஞ் சாதித்துப்பெறப்படும் பொருளதியல்புஞ் சாதிக்கு மாறுமுணர்த்தி, இனி அச்சாதனத்தானாய பயனியல்பு வகுத்துக் கூறுவானெடுத்துக் கொண்டார். அப்பயனாவது பாசவீடுஞ் சிவப் பேறுமென இருவகைப்படும். அவ்விரண்டனுட் சுட்டுணர்வினை லாகிய ஏகதேச நோக்கத்தைத் திருவஞ்செழுத்தினதுச்சரிப்பாற் பற்றறத்துடைத்தவழிப் பெறப்படுவதாகிய மேலைச்சூத்திரத்தினெ டுத்துக்கொண்ட ஆன்மசுத்திப் பயனாகிய பாசவிடுதியைச் செய்து கொள்ளுமாறு மேற்சிந்தனை செய்தபொருளைத் தெளியுமாறுணர்த்து முகத்தானுணர்த்துதல் இப்பத்தாஞ்சூத்திரத்தின் கருத்து.

இதனானே சூத்திரவிரியையும் இனிது விளங்கும். இச்சூத்திரத் தின் பிண்டப்பொழிப்பு :—

ஞானக்கண்ணாற் காணப்பட்ட அம்முதல்வன் தானுடனாய் நின் றறியவும் வேறு காணப்படுமாறின்றி யானே அறிந்தேனெனும்படி உயிர் தானேயாய் ஒற்றுமைப்பட்டு [illegible] அப்பெத்த நிலைபோல் ஈண்டு உயிர் அ[illegible] [illegible]யினும்

## தலயாத்திரைப்படம் விளக்கம்

இந்த சமாஜ வெளியீட்டின் விலை தனிப் பிரதிக்கு மூன்றணுவாகவும் எட்டுப் பிரதிகட்கு ஒரு ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (பழைய விலை தனிப்பிரதி அணு 4; ஐந்து பிரதிகள் விலை ரூ 1.) தபாற்கூலி தனிப்பிரதிக்கு ¾ அணு எட்டுப்பிரதிகட்கு (unregistered parcel மூலம்) 4 அணு. சிலோனுக்கு வீ. பி. பார்சலில்லை.

---

## தஞ்சை சைவசித்தாந்த இளைஞர் சங்கம்

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சங்கத்தின் ௨௰ம் ஆண்டு விழா மிகச் சிறப்பாக திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் 24-3-35-ல் நடந்தது. திருவாளர்கள் ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், குமாரவீரையர், கு. வேல்சாமி, பி. நடராசன், ரா. சுப்பிரமணியன், பா. சிவகுருநாத பிள்ளை ஆகிய அன்பர்கள் ஞானசம்பந்தர் பிரபாவம், பரசிவ வழிபாடு, அளியற்றூர், விருந்தோ விருந்து முதலியனபற்றி விரிவுரைகளும் அளவளாவல்களும் நிகழ்த்தினார்கள். இவ்விளைஞர் சங்கம் புரிந்துவரும் தொண்டு மிகவும் போற்றற்குரியது. ஏனைய இளைஞர் சங்கங்களும் இச்சங்கத்தைப் பின்பற்றி ஒழுகினால் தமிழ்நாடு சைவநாடாகும்.

---

உ

சிவமயம்

## வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# தொல்காப்பியம் பொருளதிகாரம்

## இரண்டாம் பாகம் (பேராசிரியம்)

மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கும் அடங்கிய இப்பதிப்பு ஏட்டுப் பிரதியோடு ஒப்பிட்டு ஆராய்ந்து திருத்தப்பெற்றது; அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களையுடையது; பளபளப்பான கடிதத்தில் அச்சிடப்பட்டு முழுக்காலிகோ கட்டடஞ் செய்யப்பெற்றது. முக்கியமான பகுதிகள் தடித்த எழுத்தில் காட்டப்பட்டுள்ளன. விலை ரூபாய் மூன்று; ரிஜிஸ்தர் தபாற் செலவு அணு 0-10-0.

நச்சினார்க்கினியம், பேராசிரியம் ஆகிய இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூபா 7-0-0; ரிஜிஸ்தர் தபாற் செலவு ரூபா 1-1-0.

**கிடைக்குமிடங்கள்:**—(1) சைவசித்தாந்த மகாசமாஜம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை. (2) முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8, No. 4

உ

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சித்தாந்த சாத்திரம் பதினான்கு

# மூலமும் உரையும்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு; 1136 பக்கங் கொண்டது; நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பெற்றது; அழகான முழுக்கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது; மிகத்திருத்தமாகப் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு மூலமும் உரையும் செப்பஞ் செய்யப்பெற்றது; சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் ஆகிய மூன்று நூல்கட்கும் இதுவரை அச்சிடப்பெறாத சிந்தனையுரையோடு கூடியது; துகளறுபோதம் என்ற நூலின் மூலத்தை அநுபந்தமாக வுடையது.

தனிப்பிரதி விலை ரூபா மூன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூபா பத்து.

ரயில்வே பார்சல், தபாற்கூலி வேறு. விவரங்கட்கு உடனே ரிப்ளை கார்டு எழுதுக. சிலோன் வாசிகட்கு வி. பி. இல்லை. இன்று முதல் ஒருமாதம்வரையில் 1935௵த்திய சந்தாவைச் செலுத்திய சமாஜ அங்கத்தவர்க்குமட்டும் ஒவ்வொரு பிரதி ரூபா இரண்டு என்ற விலைக்குத் தரப்படும். இதைப் பெறுவதற்கு விலையும் தபாற்கூலியும் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். வி. பி. இல்லை. பிரதிகள் சிலவே யுள்ளபடியால் உடனே பணம் அனுப்பிப் பெறுக.

இங்ஙனம்

10—4—1935. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.